Registered as a Newspaper

# உதயன்


சுடர் : 37
கதிர் : 196

வெள்ளிக்கிழமை
10 ஜூன் 2022

வைகாசி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை : ரூ. 50

முச்சந்தி முரளி



"மே 9 மஹிந்த போனார், ஜூன் 9 இல பஸில் பறந்திட்டார். அப்ப ஜூலை 9 இல் சேர் போவாரோ வீட்டை...."

### கோத்தாவை வீடு செல்ல வலியுறுத்தி

# பொலிஸ் தலைமையகம் மக்களின் முற்றுகைக்குள்!

## பொலிஸாரின் தடைகளைத் தகர்த்ததால் பதற்றம்

## கண்ணீர்ப் புகைக்குண்டு பிரயோகம்

கொழும்பு, ஜூன் 10

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலக வேண்டுமென வலியுறுத்தி, அறவழியில் போராட்டம் மேற்கொண்டவர்கள்மீது தாக்குதல் நடத்த கட்டளையிட்ட பிரதான சூத்திரதாரிகள் கண்டறியப்படவேண்டும், இது தொடர்பில் நீதி நிலைநாட்டப்படவேண்டுமென வலியுறுத்தி பொலிஸ் தலைமையகம் முன்பாக முற்றுகை போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.



15 ➤

## லாப்ஸ் இன்றே விநியோகம்!

யாழ்., ஜூன் 10
லாப்ஸ்எரிவாயுசிலிண்டர்கள் நேற்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டபோதும்

15 ➤

## தீயில் எரிந்து இளம் பெண் உயிரிழப்பு

யாழ்., ஜூன் 10
தனக்குத்தானே தீமூட்டிக் கொண்ட இளம் பெண்ஒருவர்சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

15 ➤

## முகக்கவசம் கட்டாயம் இல்லை!

கொழும்பு, ஜூன் 10
இன்று முதல் நாட்டில் முகக்கவசம் அணிவது கட்டாயம் இல்லை என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

15 ➤

## அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படாதாம்

கொழும்பு, ஜூன் 10
அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சம் தேவையில்லை என விவசாய, வனவிலங்கு மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

15 ➤

### யாழ். மாவட்டத்துக்கு

## 1,800 அரிசிப் பொதிகள் மேலதிகமாகக் கிடைத்தன

யாழ்ப்பாணம், ஜூன் 10
தமிழக அரசின் நிவாரணப் பொதியின் இரண்டாம்கட்டத்தில்

15 ➤



## '21'க்கு உடன்பட முடியாது அதனாலேயே பதவி விலகல்!

### பஸில் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10
நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும். அதைச் செய்வதாக இருந்தால்

16 ➤

## சரணடைந்த ஜோன்ஸ்டனுக்கு பிணை வழங்கியது மன்று!

கொழும்பு, ஜூன் 10
மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய,

15 ➤



அரியாலையில் நேற்றிரவு பயங்கரம்

## ரயிலோடு மோதியது கார்; இளைஞர்கள் இருவர் பலி!

பக்.15

## முடிந்ததைச் செய்துவிட்டேன் இன்னும் பயணம் தொடரும்

### பதவி விலகிய பஸில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10
நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகினாலும், எனது அரசியல் பயணம் தொடரும். அதற்குத்

15 ➤

## வடக்கில் 3 மாவட்டங்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு மண்

14 ➤

## இளைஞர்களிடையே மோதல்; தாக்கப்பட்ட ஒருவர் உயிரிழப்பு

### முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு, ஜூன் 10
முல்லைத்தீவு - மல்லாவியில் நேற்றுமுன்தினம் இளைஞர் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 5 பேர் காயங்

14 ➤

## பணிப்புறக்கணிப்புக்கு தடை விதித்தது நீதிமன்று

கொழும்பு, ஜூன் 10
மின்சாரப் பொறியியலாளர் சங்கத் தலைவர் அனில்

15 ➤

## மின்சாரத் திருத்தச் சட்டம் 84 வாக்குகளால் நிறைவேற்றம்

கொழும்பு, ஜூன் 10
மின்சாரத்திருத்த சட்டவரைவின் இரண்டாம் வாசிப்பு 84

15 ➤




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இலங்கைக்கு 47 மில். டொலர் உயிர்காக்கும் உதவி தேவை!

கொழும்பு, ஜூன் 10
இலங்கைக்கு 47 மில்லியன் டொலர் பெறுமதியான உயிர்காக்கும் உதவி தேவை. ஜூன் மாதம் முதல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரையிலான காலப் பகுதியில் பாதிப்பைச் சந்திக்கப்போகும் சுமார் 1.7 மில்லியன் மக்களுக்கு இந்த உதவி தேவைப்படுகின்றது என்று ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.
தற்போதைய நெருக்கடி காரணமாக எழுந்துள்ள அவசர தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஐக்கிய நாடுகளின் உதவியுடனான பல்துறை சர்வதேச உதவி தேவை என இலங்கை அரசாங்கம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே ஐ.நா. இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.
இது தொடர்பில் இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையின் உணவுப் பாதுகாப்புக்குப் பல விடயங்கள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. நாங்கள் தற்போது நடவடிக்கை எடுக்காவிட்டால் பல குடும்பங்களால் அடிப்படை உணவுத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமற்போகும். இந்த வருடத்தின் பிற்பகுதியில் மனிதாபிமான நெருக்கடி ஏற்படுவதை தடுப்பதற்கு அவசர நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். ஒருகாலத்தில் மிகவும் வலுவானதாகக் காணப்பட்ட இலங்கையின் சுகாதாரத்துறை நெருக்கடியில் சிக்குண்டுள்ளது. ஆதலால், இலங்கை மக்களுக்கான தனது ஆதரவை சர்வதேச சமூகம் வெளிப்படுத்தவேண்டிய தருணம் இது - என்றார். (ம)

# மக்களின் பணத்தில் அரசாங்கம் கைவைப்பதற்கு வாய்ப்பில்லை

## வதந்திகளால் பொதுமக்கள் அச்சப்பட வேண்டாம் என்று இலங்கை வங்கியின் உதவி முகாமையாளர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜூன் 10**
**நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையால், வங்கிகளில் உள்ள மக்களின் பணத்தை அரசாங்கம் எடுத்துவிடும் என்பது போன்ற தகவல்கள் தற்போது பரப்பப்படுகின்றன. இந்தத் தகவல்களில் உண்மையில்லை என்று இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.**

இலங்கை வங்கியின் யாழ்ப்பாண பேருந்து நிலைய கிளை திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த காலங்களில் கொரோனா என்கின்ற பெரும் சவாலை எதிர்கொண்டோம். தற்போது பெரும் பொருளாதாரப் பின்னடைவை எதிர்கொண்டுள்ளோம். எனினும், இதை ஒரு சவாலாக எதிர்கொண்டு வெற்றிபெற்று இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. அதற்கு வங்கிக் கட்டமைப்பை திறம்படப் பேணவேண்டும்.
நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பு வீழ்ச்சி அடையுமாக இருந்தால் நாடு அதலபாதாள நிலைக்குச் சென்றுவிடும். வங்கிகள் மக்களின் பணத்தை கையாடிவிடும் என்ற வதந்தி தற்போது பரவலாக பரப்பப்படுகின்றது. நாளுக்கு நாள் வாடிக்கையாளர்கள் இது தொடர்பில் எம்மிடம் கேட்ட வண்ணம் இருக்கின்றார்கள். உண்மையில் இது பொய்யான தகவலாகும். அவ்வாறு நடப்பதற்கு இம்மியும் வாய்ப்பில்லை. மக்களின் பணத்துக்கு 100 வீதமல்ல 200 வீதம் பாதுகாப்பு இருக்கும். ஆகவே, இதுதொடர்பான வதந்திகளைப் பரப்பாமல் அனைவரும் பொறுப்புடன் செயற்படவேண்டும் - என்றார். (ம-26)

# தேசிய மின்தடை நாசவேலையே!

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் இவ்வாறு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10
நாட்டின் பல பகுதிகளில் நேற்றுக் காலை மின்சாரம் தடைப்பட்டமையை, நாசவேலையாகவே கருத முடியும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் தமது சிறப்புரிமைகளை தவறாகப் பயன்படுத்துகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாத வகையில் தொழிற்சங்கங்கள் எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கையிலும் அல்லது பணிப்புறக்கணிப்பிலும் ஈடுபடுவதற்கு சுதந்திரம் உள்ளது. அத்துடன் தொடர்ந்து தடையில்லா மின்சாரம் வழங்கும் பொறுப்பை, இலங்கை மின்சாரசபை கொண்டுள்ளது - என்றார். (ம)

# தேர்தலை சந்திக்க பெரமுன தயாராம்!

## பஸில் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 10
நாளை வேண்டுமானாலும், தேர்தலைச் சந்திப்பதற்கு பொதுஜன பெரமுன தயார். இலங்கையில் மூன்று ஜனாதிபதி தேர்தல்களின்போது ராஜபக்சக்களுக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். எனவே, மக்கள் ஆணையை ஏற்பதற்கு நாம் தயார்' இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.
கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.
'உலகில் பல நாடுகளில் இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் பதவிகளை வகிக்கின்றனர். இரட்டைக் குடியுரிமை உடைய மூவர் பிரதமர் பதவிகளை வகிக்கின்றனர். எனவே, இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் பதவிகளை வகிப்பது தவறு கிடையாது. எனவே, வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்பது எனது கருத்தாகும்.
பொதுஜன பெரமுனவை விஸ்தரிக்கும் நடவடிக்கை விரைவில் ஆரம்பமாகும். அடுத்த தேர்தலில் போட்டியிடுவோம். நாளை வேண்டுமானால் தேர்தலை எதிர்கொள்ள எமது கட்சி தயார். மக்கள் வழங்கும் தீர்ப்புக்கு தலை வணங்குவோம். அதேவேளை, அந்நியச் செலாவணி குறைவடைந்ததற்கு நான் பொறுப்பு அல்ல. நெருக்கடியான கட்டத்தில்தான் நான் நிதி அமைச்சுப் பதவியை ஏற்றேன்' - என்றார். (ம-44)

# குறுகியகால உற்பத்தி திட்டத்தை விரைவில் செயற்படுத்துங்கள்!

## கோபா குழு விவசாய அமைச்சுக்குப் பணிப்பு

கொழும்பு, ஜூன் 10
நாட்டில் பொருளாதார நெருக்கடியால் ஏற்படவுள்ள உணவு நெருக்கடியைத் தணிப்பதற்கு விரைவில் செயற்படுத்தக் கூடிய உற்பத்தித் திட்டங்கள் தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவான கோபா குழுவால் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.
உணவு நெருக்கடியைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளக்கூடிய குறுகிய கால மற்றும் நீண்டகால உற்பத்தித் திட்டங்கள் குறித்து அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆராயப்பட்டது.
இந்த வருடத்துக்குத் தேவையான அரிசித் தேவையில் பெருந்தொகையானவை இந்தப் போகத்தில் அறுவடை செய்யமுடியும் என மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாகவும் எஞ்சிய தொகையைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு வர்த்தக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டது.
துரித உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றாக "ஒன்றிணைந்து பயிர்செய்வோம் - நாட்டை வெல்வோம்" என்ற திட்டத்தை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளோம். இது இந்த மாதம் 15ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என விவசாய அமைச்சின் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.
இந்தத் திட்டம் ஒழுங்குமுறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறதா? என்பதைக் கண்காணிக்குமாறும் விவசாய அமைச்சுக்கு கோபா குழு பணிப்புரை விடுத்தது. (ச-இ)

# 'கப்புட்டு கா கா' எனது ரிங்ரோன்

## பஸில் பகிரங்கம்

நாட்டில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் போது பாடப்பட்ட 'கப்புட்டு கா கா, பஸில், பஸில், பஸில்' என்ற பாடலே என்னுடைய தொலைபேசியின் ரிங்டோன் என முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச அறிவித்துள்ளார்.
நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறப்பது தொடர்பான அறிவித்தலை வெளியிடும் வகையிலான ஊடகவியலாளர் சந்திப்பொன்றை பஸில் ராஜபக்ச நேற்று ஏற்பாடு செய்திருந்தார். இதன்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே, தன்னுடைய ரிங்கிங் டோனும் குறித்த பஸில் பஸில் என்ற பாடல்தான் என அவர் குறிப்பிட்டுள்ளார்.
சிறிது காலத்துக்கு முன்னர் பஸில் வழங்கிய நேர்காணல் ஒன்றின்போது கப்புட்டாஸ் என காகங்களை விளித்து கூறிய வார்த்தை சமூக வலைத்தளங்களில் கேலிக்குள்ளாக்கப்பட்டிருந்தது. அதனையடுத்து நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையின்போது நடத்தப்பட்ட பொதுமக்கள் போராட்டங்களில் பஸில் ராஜபக்சவை விமர்சிக்கும் வகையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் 'கப்புட்டு கா கா பஸில் பஸில்' என கூச்சலிட்டமை ஒரு பாடலாக மாறியது.
அத்துடன், மக்கள் போராட்டம் இடம்பெறும் போராட்டக்களத்தில் காகத்தைப் போன்ற உருவங்களுக்கு, குரக்கன் சால்வை அணிவித்து பஸில் ராஜபக்சவை கேலி செய்யும் வகையில் போராட்டங்கள் நடத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 மாதங்களுக்கு தேவையான அரிசியை இறக்குமதி செய்க!

## *விவசாய அமைச்சு கோரிக்கை*

**கொழும்பு, ஜூன் 10**

**எதிர்வரும் நான்கு மாதங்களுக்குத் தேவையான அரிசியை இறக்குமதி செய்யுமாறு விவசாய அமைச்சு, வர்த்தக அமைச்சுக்கு அறிவுறுத்தியுள்ளது.**



விவசாயப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அஜந்த டி சில்வா இது தொடர்பில் தெரிவித்ததாவது:-
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை மட்டுமே நாட்டில் அரிசி கையிருப்பில் உள்ளது. மாதாந்தம் 2 லட்சம் மெற்றிக்தொன் அரிசி நாட்டில் நுகர்வுக்குத் தேவையாக உள்ளது. தற்போது கையிருப்பில் உள்ள அரிசி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை மட்டுமே போதும். ஆதலால், அடுத்த நான்கு மாதங்களுக்குத் தேவையான அரிசியை இறக்குமதி செய்வது அவசியமானதாகும் - என்றார். (ம)

## யானை தாக்கி 4 மாத குழந்தை சாவு

அக்கரைப்பற்று, ஜூன் 10
அக்கரைப்பற்று - பள்ளக்காடு குப்பைமேடு பகுதியில் யானை தாக்கியதில் 4 மாதக் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. மரமொன்றின் கீழ் குழந்தையை உறங்க வைத்துவிட்டு குழந்தையின் பெற்றோர் கால்நடைகளை மேய்ப்பதற்குச் சென்ற வேளை அங்கு பிரவேசித்த யானை குழந்தையை தாக்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.
மேலும் குழந்தையின் தாயும் யானையின் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்த நிலையில் அக்கரைப்பற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



## அமெரிக்காவுக்கு பறந்தார் பஸிலின் மனைவி புஷ்பா

கொழும்பு, ஜூன் 10
பஸில் ராஜபக்சவின் மனைவி புஷ்பா ராஜபக்ச நேற்று அதிகாலை எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் மூலம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து டுபாய் ஊடாக அமெரிக்கா சென்றுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.
பஸில் ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நேற்று விலகினார். இதையடுத்து அவர் அமெரிக்காவுக்குச் சென்று அங்கு வசிக்கவுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த நிலையிலேயே பஸிலின் மனையான புஷ்பா நேற்று அதிகாலை அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார் என்று தகவல் வெளிவந்துள்ளது. (ம)

## இந்தியாவுடன் இணைந்து இலங்கைக்கு உதவிகள்!

### *சீனா அறிவிப்பு*

கொழும்பு, ஜூன் 10
இலங்கைக்கு உதவும் விடயத்தில் இந்தியாவுடன் இணைந்து செயற்படத் தயார் என்று சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜாவோ லிஜியான் தெரிவித்துள்ளார்.
இலங்கைக்கு உதவுவது தொடர்பில் சீனா தெரிவித்ததாவது:-
இலங்கைக்கு ஆதரவளிக்கும் விடயத்தில் இந்தியாவின் பெரும் முயற்சிகளை நாங்கள் கவனத்தில் எடுத்துள்ளோம், நாங்கள் அதனை அங்கீகரித்துள்ளோம், நெருக்கடியில் சிக்குண்டுள்ள இலங்கை உட்பட ஏனைய நாடுகள் அந்த நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கு உதவுவதற்கு சர்வதேச சமூகத்துடனும் இந்தியாவுடனும் இணைந்து செயற்பட தயாராகவுள்ளோம் என்றார்.
இலங்கையில் இரண்டு வல்லரசுகளும் புவிசார் அரசியல் போட்டியில் ஈடுபட்டுள்ள தருணத்தில் இந்தக் கருத்து சீனாவிடம் இருந்து வெளியாகியுள்ளது. இந்த வருட ஆரம்பத்தில் இலங்கையின் வட பகுதியில் குறிப்பாக யாழ். குடாநாட்டில் சீனா முன்னெடுக்கவிருந்த புதுப்பிக்கத்தக்க சக்தித் திட்டங்களை இலங்கை இந்தியாவுக்கு வழங்கியமை குறித்து சீனா கடும் அதிருப்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# நீர்மின் உற்பத்தி செயலிழப்பு முழுவீச்சுடன் நுரைச்சோலை

கொழும்பு, ஜூன் 10
நீர்மின் உற்பத்தி நிலையங்கள் செயலிழந்த காரணத்தால், நுரைச்சோலை அனல் மின்னுற்பத்தி நிலையத்தின் வினைத்திறன் அதிகரிக்கப்பட்டு அது தேசிய மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது எனப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
இதுதொடர்பில் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்ததாவது:-
தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நீர்மின் உற்பத்தி நிலையங்களான லக்ஸபான, நவலக்ஸபான, பொல்பிட்டிய, விமல சுரேந்திர மற்றும் கெனியோன் ஆகிய 5 நீர்மின் நிலையங்களின் மின் உற்பத்தி நடவடிக்கைகள் தற்காலிகமாக செயலிழந்துள்ளன.
இதனால் குறித்த நீர்மின் உற்பத்தி நிலையங்களில் கிடைக்கப்பெறும் 300 மெகாவாட்ஸ் மின்சாரத்தை தேசிய மின்கட்டமைப்பு இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.
இதனைச் சரிசெய்வதற்கு நிலக்கரியில் இயங்கும் அனைத்து மின்உற்பத்தி நிலையங்களையும் அதன் முழுவினைத்திறனோடு செயற்பட வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென நுரைச்சோலை அனல் மின்னுற்பத்தி நிலையத்தின் வினைத்திறன் அதிகரிக்கப்பட்டு அது தேசிய மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)




**திரும்பவும் பெற்றோல், டீசலுக்கு கடும் தட்டுப்பாடு. எல்லா செற்றிலையும் முன்னுக்கு கயிறு கட்டி, 'இஞ்ச ஒண்டுமில்லை, வராதையுங்கோ' எண்டு சொல்லாமல் சொல்லுகினம். சனங்களும் எப்ப அந்தக் கயிறு அவிழ்படும், எப்ப பெற்றொல் குடுபடும் எண்டு அடிக்கடி செற்றுகளை நோட்டமிட்டுக் கொண்டே இருக்கினம். எப்பவாவது ஒரு செற்றில பெற்றோல் குடுபடுகுது எண்டால், எங்கட சனத்தின்ர மூக்கு எப்பிடியோ மோப்பம் பிடிச்சிடும். அடுத்த நிமிசமே பெரிய வரிசை அங்க வந்திடும்.**

**ஆனாலும் இந்த வரிசையிலையும் இப்ப 'செல்வாக்கு' புகுந்து விளையாடுது. ஓ.எல் எக்ஸாம் நடக்கேக்க, எக்ஸாம் டியூட்டிக்கு போறவைக்கும், எக்ஸாம் எடுக்கிற பிள்ளையளின்ர பெற்றோருக்கும் முன்னுரிமை குடுக்கச் சொல்லி ஒரு ஓர்டர் வந்ததெல்லோ. இப்ப அந்த எக்ஸாம் முடிஞ்சு ஒரு கிழமை ஆகியும், இன்னும் அதே அட்மிசன் கார்ட்டுகளோடையும், அப்பொயிண்ட்மெண்ட் கடிதங்களோடையும் வந்து பெற்றோலை வரிசையில நிக்காமல் அடிச்சுக் கொண்டு போயினம். செற்றில நிக்கிறவையும் விசயம் தெரியாமலோ, இல்லாட்டி தெரிஞ்சோ அவைக்குத்தான் முன்னுரிமை குடுக்கினமாம்.**

**அதைவிட அரசாங்க உத்தியோகத்தர்மார் சிலருக்கு முன்னுரிமை குடுக்கச் சொல்லி, செற்றுகளுக்கு தனிப்பட்ட ஓர்டர் போயிருக்கு. குறிப்பா டொக்டர், நேர்ஸ்மார் ஆஸ்பத்திரிக்கு போறது தடைப்படக் கூடாது எண்டு அவை தங்கட 'ஜொப் ஐசியை' காட்டினால், கியூவில நிக்காமல் பெற்றோல் அடிக்கலாமாம். இப்பத்தைச் சூழலில ஆஸ்பத்திரியள் ஒழுங்கா இயங்க வேணுமெண்டால், இப்படியான சில சலுகைகள் அவைக்குச் செய்யத்தான் வேணும். ஆனாலும் அதையும் சிலர் பிழையா பாவிக்கினமெண்டதுதான் இப்ப பிரச்சினை. ஆஸ்பத்திரியில வேலை செய்யிறவை தாங்கள் மட்டும் போகாமல்,தங்களோட வேற ஆக்களையும் (ஆஸ்பத்திரியளில வேலை செய்யாதவை) கூட்டிக் கொண்டு அவையையும் லைனில நிக்கவிடாமல் குறுக்கால கூட்டிக் கொண்டு போய், பெற்றோல் அடிப்பிக்கினமாம். சுகாதாரத்துறை ஆக்கள் கஷ்டப்படாமல் வேலைக்கு போய்வரவேணுமெண்டு சில சலுகைகள் குடுத்தால், அதை அவை தங்கட செல்வாக்கை காட்டுறதுக்கு பாவிக்கினம். அதோட லைனில நிக்கிற மற்றச் சனங்களின்ர தலையிலையுமெல்லோ மிளகாய் அரைக்கினம்.**

**இதையெல்லாத்தையும் பாக்கிறவைக்கு ரணிலிலதான் ஆத்திரம் வருகுதாம். சும்மா அந்தாள் வாயை வைச்சுக் கொண்டிருக்காமல், 'மூண்டு கிழமைக்கு எரிபொருள் நிலைமை சிக்கல்தான்' எண்டு பார்லிமெண்டில அண்டைக்கு பழக்கதோசத்தில ஒப்பாரி வைச்சிருக்கிறார். அவர் அப்பிடிச் சொன்னதையும், உலக சந்தையில பெற்றோல் விலை ஏறினதையும் கூட்டிக்கழிச்சுப் பார்த்த எங்கட சனம் 'பெற்றோல் விலை திரும்பவும் ஏறப்போகுது' எண்டு யோசிச்சதுதான் இப்பிடி செற்றுகளில பெற்றோல் வந்த உடனேயே முடிஞ்சுபோகக் காரணம். சனத்திலையும் பிழையில்லைக் கண்டியளோ. இப்பிடி முன்னுக்கு ஒரு ஒப்பாரி வைச்சால், பின்னுக்கு விலையேறுறது இலங்கையில வாடிக்கையாப் போனபடியால், கொஞ்சம் எச்சரிக்கையா இருந்திருக்கினம் போல. அவ்வளவுதான்.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்திரி - ரணில் ஆட்சிக்காலத்தில்

# தமிழர் தாயகத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை முழுமையாக அமையுங்கள்

### சாணக்கியன் எம்.பி. வலியுறுத்து



**கொழும்பு, ஜூன் 10**

**மைத்திரி - ரணில் ஆட்சிக்காலத்தில், வடக்கு -கிழக்கு மாகாணங்களில் அமைக்க ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை முழுமையாக கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரையில் 30 வருட போர் காரணமாக வீடுகளை இழந்து, வீடுகள் இல்லாமல் ஆக்கப்பட்டு இன்னும் பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இதனால், மைத்திரி - ரணில் அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் பெரியளவில் வீடமைப்பு வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும் தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் அந்த வீடுகள் இதுவரை முடித்துக்கொடுக்கப்படாமல் உள்ளன. மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை, நாம் பூர்த்தி செய்யமுடியாது என அரசாங்கத்தின் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். இதை ஏற்க முடியாது. எனவே வடக்கு - கிழக்கில், நல்லாட்சி அரசாங்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை நிர்மாணிப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் -என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தைக் காட்டிலும் தற்போதைய அரசாங்கம் கடன் அடிப்படையில் அதிக எண்ணிக்கையிலான வீடுகளை அமைத்துக்கொடுத்துள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

இதன்போது குறுக்கிட்ட சாணக்கியன், இந்த வீடுகளுக்கு ஒரு லட்சம் ரூபா மாத்திரமே கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதனைக்கொண்டு வீடுகளை அமைக்கமுடியுமா? எனவும் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த வீடமைப்புத்துறையின் முன்னாள் பிரதியமைச்சர், குறித்த வீடுகளுக்கு 6 லட்சம் ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டினார். எனினும் அந்தத் தகவல் பொய்யானது என்று சாணக்கியன் மறுத்துரைத்தார். (ம)

## இந்தியாவின் உதவிகள் எவ்வாறு பகிரப்படுகின்றன?

### தெளிவுபடுத்த வேண்டுமென கூட்டமைப்பினர் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 10

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கிடைத்த உணவுகள் எவ்வாறு பகிரப்படுகின்றன என்பது தொடர்பாக நாடாளுமன்றில் தெளிவுபடுத்தப்படவேண்டுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இந்தக் கோரிக்கையை நேற்று விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் இன்று படையினர் பொதுமக்களின் நிலங்களைக் கைப்பற்றி விவசாயம் செய்கின்றார்கள். அத்துடன் படையினர் மக்களுக்குத் தொடர்ந்தும் இதரப் பிரச்சினைகளையும் ஏற்படுத்தி வருகின்றார்கள். இது ஓர் அடக்குமுறையாகும் -என்றார். (ம)

## கேள்விப் பத்திரங்கள் இல்லாமல் மின்சக்தி திட்டங்கள் வேண்டாம்!

### நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 10

கேள்விப் பத்திரங்கள் இல்லாமல் புதுப்பிக்கப்பட்ட மின்சக்தித் திட்டங்களை முன்னெடுக்கவேண்டாம் என்று தேசிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

கேள்விப்பத்திரம் இன்றி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், கொள்ளைகளுக்கு வழிவகுக்கும் செயற்பாடு. 10 மெகாவாட்ஸ்க்கு குறைந்த திட்டத்துக்கு கேள்விப்பத்திரம் இல்லாமலும், அதற்கு மேற்பட்ட திட்டங்களுக்கு கேள்விப்பத்திரங்களை அழைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் -என்றார். (ம)

## வானிலை அவதானிப்பாளர் போன்று நடக்கிறார் ரணில்

### விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 10

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு வானிலை அறிவிப்பாளர் போன்றுதான் நடந்துகொள்கின்றார் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ.

ரணிலின் செயற்பாடுகள் ஒரு பிரதமர் போன்று இல்லை. அவர் நாடாளுமன்றத்துக்கு வந்து இங்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வானிலை அவதானிப்பாளரைப் போன்றுதான் உள்ளது என்று விமல் மேலும் தெரிவித்தார். (ம)

# சித்திரவதை செய்த தந்தை சிறைவாசம் செய்யக்கூடாது

### நீதிமன்றில் அழுது புலம்பிய மகள்: அழைத்து ஆறுதல் கூறினார் நீதிபதி

மன்னார், ஜூன் 10

தன்னை தனது தந்தை சித்திரவதை செய்திருந்தாலும் அவரை சிறையில் அடைக்கக்கூடாது. அவர் தற்போது தன்னை நன்றாகப் பார்த்துக் கொள்கின்றார் என்று நீதிமன்றில் கதறியழுதுள்ளார் மகள். மகளின் கோரிக்கைகளையும் சட்டத்தரணியின் வாதங்களையும் கேட்ட நீதிபதி ஒத்திவைத்த சிறைத்தண்டனையுடன் சந்தேகநபரை விடுவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் மன்னார் மேல்நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

குறித்த நபர், தனது மகள் ஒன்பது வயதாக இருந்தபொழுது (தற்போது மகளுக்கு 14 வயது) உலோக கரண்டியை சூடாக்கி மகளைச் சுட்டுச் சித்திரவதை செய்தார் என்று, அன்று பொலிஸாரால் தொடுக்கப்பட்ட வழக்கின் விசாரணை நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கை தொடர்ந்து வாதாட விரும்பாத தந்தை, தான் குற்றவாளி என மன்றுரை செய்தார். அவரின் மகளாகிய 14 வயது சிறுமியும் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

**எதிரி சார்பான சமர்ப்பணம்**

குறித்த தந்தை சார்பாக நீதிமன்றத்தில் தோன்றிய சட்டத்தரணி எஸ்.டினேஸ், மன்றில் எதிரியின் சார்பாக கருத்தை முன்வைக்கையில்;

பாதிக்கப்பட்ட சிறுமி எதிரியின் சொந்த மகள். அந்தச் சிறுமி இன்றையதினம் தனது தந்தையுடனேயே நீதிமன்றம் வந்துள்ளார். இவர் நான்கு பிள்ளைகளின் தந்தை. குறித்த நபர் கடற்றொழில் செய்தே தனது குடும்பத்தை பராமரித்து வருகின்றார். இவருக்குச் சிறை தண்டனை விதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அந்தக் குடும்பம் முற்றாகப் பாதிக்கப்படும். ஆதலால் ஒத்திவைத்த சிறைதண்டனையோ அல்லது தண்டப் பணமோ விதிக்கவேண்டும் என்றும் மன்றுரைத்தார்.

**வழக்குத் தரப்பினரின் சமர்ப்பணம்**

வழக்குத்தொடுநர் சார்பாக தோன்றிய அரச சட்டத்தரணி, குறித்த குற்றச்சாட்டுக்கு தண்டனையாக 2 வருடங்கள் குறையாத 10 வருடங்களுக்கு மேற்படாத சிறைதண்டனை மற்றும் தண்டப்பணம் மற்றும் இழப்பீடு வழங்கப்படவேண்டுமென இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 308ஏ(2) கூறுவதாகவும் ஆதலினால் கட்டாய சிறைத்தண்டனை வழங்க வேண்டும் என்றும் ஒத்திவைத்த சிறை தண்டனை வழங்க முடியாது எனவும் விண்ணப்பம் செய்திருந்தார்.

**நீதிபதியின் தீர்ப்பு**

இருதரப்பு விண்ணப்பத்தையும் செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி அந்தச் சிறுமியை அழைத்து, இந்தச் சம்பவத்துக்குப் பிறகு வேறு ஏதாவது துன்புறுதல் ஏற்பட்டதா? என வினவினார். அதற்கு அந்தச் சிறுமி, இல்லையென்றும் அப்பா எங்களை நல்லா பார்த்துக்கொள்கின்றார் என்றும் கூறினார்.

அனைத்தையும் ஆராய்ந்த நீதிபதி, சட்டம் கட்டாயம் சிறைத் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்ற ஏற்பாட்டைக் கொண்டிருந்தாலும் வழக்கின் தன்மை மற்றும் எதிரியின் குடும்ப நிலை என்பவற்றைக் கருத்திற் கொண்டு 5 வருடங்களுக்கு ஒத்திவைத்த 2 வருட சிறை தண்டனையும் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதித்துத் தீர்ப்பிட்டார்.

**சட்டத்துக்கும் அப்பால்**

தண்டப்பணத்தைச் செலுத்துவதற்காக எதிரி சிறைக் கூண்டில் அடைக்கப்பட்டார். தனது தந்தை சிறையில் அடைக்கப் பட்டதைப் பார்த்த சிறுமி நீதிமன்றத்தில் சத்தமிட்டு அழத் தொடங்கினாள்.

அப்பொழுது பெண் பொலிஸார் அந்தச் சிறுமியை அழைத்துக் கொண்டு வெளியே சென்றனர். அடுத்த வழக்கும் அழைக்கப்பட்டது.

ஆனால், சிறுமியின் அழுகை நிற்கவில்லை. இதையடுத்து நீதிபதி, மீண்டும் அந்தச் சிறுமியை அழைத்து, 'ஏன் அழுகின்றீர்கள்?' என வினாவினார். சிறுமி 'அப்பா வேண்டும்' என்று அழுததும், நீதிபதி 'அழ வேண்டாம். அப்பா வருவார். அப்பாவுக்கு சிறைத் தண்டனை வழங்கப் படவில்லை' என ஆறுதல் கூறினார். அதன் பின்னர் சட்டத்தரணிகளை கண்ணுற்ற நீதிபதி, சட்டத்தில் கட்டாய சிறைத் தண்டனை விதிக்கப்படவேண்டுமென கூறியிருக்கின்றபோதிலும், இவ்வாறான புற விடயங்களையும் அவதானிக்க வேண்டும். சிறைத்தண்டனை விதிக்கப்படும் பட்சத்தில் குடும்பம் மாத்திரமல்ல சிறுமியும் பாதிக்கப்படுவார் என்று தெரிவித்தார். (ம-60-213)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 1000 கொள்ளை சம்பவங்கள்

கொழும்பு, ஜூன் 10

**நாட்டின் பொருளாதாரம் மோசமடைந்துள்ள நிலையில் கடந்த 4 மாதங்களில் மாத்திரம் சுமார் 1000 கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.**



2021 ஆம் ஆண்டு முழுவதும் 14ஆயிரத்து 312 கொள்ளைகள் மற்றும் வழிப்பறி சம்பவங்கள் இடம்பெற்றன. எனினும் 2022 முதல் நான்கு மாதங்களில் மாத்திரம், 4 ஆயிரத்து 853 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்த ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை 2,224 வீடு உடைப்பு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் கடந்த நான்கு மாதங்களில் 948 கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வுடன் மட்டுமல்லாமல் நாட்டில் திருட்டு, கொள்ளை, வழிப்பறி, வீடு உடைப்பு போன்றவை வேகமாக அதிகரித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஆண்டை விட திருட்டு, கொள்ளை மற்றும் வழிப்பறி சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பொலிஸாரின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. திருட்டு சம்பவங்களின்போது 50 கோடிக்கு மேல் மதிப்புள்ள பொருள்கள் திருடப்பட்டன. (ம)

## கிரிக்கெட் மைதானத்தில் 'கோ ஹோம் கோத்தா'

கொழும்பு, ஜூன் 10

இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ரி - 20 ஆட்டத்தின்போது, மைதானத்தில் குழுமியிருந்த ரசிகர்கள் 'கோ ஹோம் கோத்தா' என்ற கோஷத்தை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினம் இந்த ஆட்டம் இடம்பெற்றது. இரண்டாவது இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாடியபோதே ரசிகர்கள் இவ்வாறு எதிர்ப்பை வெளியிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம)

## குருநாகலில் எரிபொருள் விநியோகத்தில் பாரபட்சம்

கொழும்பு, ஜூன் 10



குருநாகல் மாவட்டத்தில் செல்வந்தர்களின் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது.

இவ்வாறு குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று நாடாளுமன்றில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அதேவேளை கூட்டுறவு சங்க எரிபொருள் நிலையங்களுக்கு கடந்த 14 நாள்களாக எரிபொருள் விநியோகிக்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-இ)

### பாடசாலைக்கு மாணவர்களின்

# வருகை தாமதமானால் சகிப்புத்தன்மை பேணுக

கொழும்பு, ஜூன் 10



நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் பாடசாலைக்கு கால தாமதமாக வரும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சலுகை வழங்க வேண்டும். அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளபோதிலும், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படாத வகையில் அரசால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இன்று நாட்டில் கடுமையான பொருளாதார நெருக்கடி காணப்படுகிறது. அதேபோன்று பேருந்துப் போக்குவரத்து குறைந்திருக்கின்றது. இதனால் மாணவர்களின் கல்விச் செயற்பாடு பாதிப்படையும் வாய்ப்பு அதிகம் உள்ளது. இது தொடர்பாக நாம் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவுள்ளோம். இதில் மாணவர்கள் - ஆசிரியர்கள் காலதாமதமாக பாடசாலைகளுக்கு சமுகமளிக்கும்போது, சீருடையில் பிரச்சினைகள் ஏற்படும்போது, மாணவர்கள் காலணிகளை அணியாதபோது எடுக்கப்படும் நடவடிக்கைகளை தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படும் - என்றார். (ம)

## நகர்ப்புற விவசாயத்துக்கு 782 ஏக்கர் காணி தெரிவு

கொழும்பு, ஜூன் 10

நகர்ப்புறக் காணிகளைப் பண்படுத்தி பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் அரச வேலைத்திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான 782 ஏக்கர் பரப்பளவு காணி விவசாய நிலமாக இனங்காணப்பட்டுள்ளது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் அதன் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடிக்குத் தீர்வாக நகர்ப்புறங்களில் விவசாயம் செய்யக்கூடிய காணிகளை அடையாளம் காணுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்தார்.

இந்த நிலையில் நாட்டின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கி ஒரு ஏக்கர் முதல் 400 ஏக்கர் வரையான பரப்பளவைக் கொண்டுள்ளதாக இந்தக் காணிகள் இனங்காணப்பட்டுள்ளன. இந்த நிலங்களில் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் உரிய பயிர்களை இனங்கண்டு பயிரிடுவதற்கு உத்தேசித்துள்ளோம் - என்றார். (ச-இ)

## ஆஸிக்குச் சென்ற 15 இலங்கையர்கள் நாடுகடத்தப்பட்டனர்

கொழும்பு, ஜூன் 10

அவுஸ்திரேலியாவுக்குள் கடல் வழியாக சட்டவிரோதமாக நுழைய முயன்ற போது, கைது செய்யப்பட்ட 15 இலங்கையர்கள் நேற்று மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

சுமார் 19 நாள்களுக்கு முன்னர் தமது பயணத்தை மேற்கொண்ட இந்தக் குழுவினர் பல நாள்கள் பயணத்தின் பின்னர் அவுஸ்திரேலியாவை அடைந்தபோது, அந்த நாட்டின் கடலோரக் காவல்படையால் கைதுசெய்யப்பட்டு கிறிஸ்மஸ் தீவில் தங்கவைக்கப்பட்டனர்.

அந்தக் குழு கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அவர்கள் நேற்று நாடு கடத்தப்பட்டனர். அவுஸ்திரேலிய விமானப் படையின் சிறப்பு விமானத்தில் அவர்கள் அழைத்துவரப்பட்டனர். (ம)

## மசகு எண்ணெய் விலை உயர்வு

கொழும்பு, ஜூன் 10

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை மீண்டும் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

மசகு எண்ணெய் பரல் ஒன்றின் விலை 123.7 டொலராக நேற்று பதிவாகியுள்ளது. கடந்த 13 வாரங்களில் பதிவான உச்சபட்ட விலை அதிகரிப்பு இதுவென அவதானிகளால் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ரூ.40 ஆயிரத்து 403 மில்லியன் நிலுவை

கொழும்பு, ஜூன் 10

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ், இலங்கை மின்சார சபை உள்ளிட்ட பல அரச நிறுவனங்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்த வேண்டிய 40 ஆயிரத்து 403 மில்லியன் ரூபா இன்னமும் செலுத்தப்படவில்லை என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், இலங்கை மின்சார சபைக்கு வருடத்துக்கு 500 மில்லியன் ரூபா இழப்பு ஏற்படுகின்றது. எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக 4 ரஷ்ய நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் இல்லாமையால் பயிர்கள் அழியும் அபாயம்



**கிளிநொச்சி, ஜூன் 10**

**புளியம்பொக்கணை விவசாயிகள் தமது அறுவடைக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.**

புளியம்பொக்கணை கமநலசேவைகள் பிரிவுக்கு உட்பட்ட நெத்தலி ஆற்றுப் பகுதியில் 150 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தில் பம்பிமூலம் கழிவுநீரைக் கொண்டே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

பல சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கை தற்போது அறுவடைக்குதயார் நிலையில் உள்ளது. எனினும் கடந்த சில நாள்களாக எரிபொருள் கிடைக்கப்பெறாமையால் அறுவடை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நெற்கதிர்கள் சேதமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி எரிபொருளைப் பெறுவதற்காக வரிசையில் காத்திருந்த போதும் எரிபொருள் கிடைக்கப்பெறவில்லை.

எனவே எமது அறுவடைக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுத்தர கிளிநொச்சி மாவட்டச் செயலர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-113)

## தையல் இயந்திரம் திருட்டு: கரணவாயில் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், ஜூன்10

நெல்லியடி, கரணவாய் பகுதியிலுள்ள தையல் பயிற்சி நிலையமொன்றை உடைத்து தையல் இயந்திரம் உள்ளிட்ட பல லட்சம் பெறுமதியான பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவரை நெல்லியடிப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

கரணவாய் பகுதியில் இயங்கிவந்த தையல் பயிற்சி நிலையம் கடந்தவாரம் உடைக்கப்பட்டு அங்கிருந்த தையல் இயந்திரம் மற்றும் துணிகள் அடங்கிய ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டன.

சம்பவம் தொடர்பில் உரிமையாளரால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதற்கமைய நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் விசாரணையில் அதேபகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன் திருடப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டன. சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நெல்லியடி பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ச-19)



## மன்னார் அச்சங்குளத்தில் சுனாமி ஒத்திகை நிகழ்வு

மன்னார், ஜூன் 10

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அச்சங்குளம் கிராமத்தில் சுனாமி ஒத்திகை நேற்று இடம்பெற்றது.


அச்சங்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள அச்சங்குளம், அறுகுக்குன்று போன்ற கடற்கரையோரப் பிரதேசங்களில் எதிர்காலத்தில் சுனாமி சம்பந்தமான இடர்களிலிருந்து மக்களை விழிப்பூட்டுவதற்கும் அது சம்பந்தமான அறிவைப் பெற்றுக்கொள்வதற்குமாகவே இந்த ஒத்திகை இடம்பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலகம், மன்னார் பிரதேச செயலகங்கள், இராணுவம், பொலிஸ், வேள்ட்விசன், இடர் முகாமைத்துவப் பிரிவு, சென்ஜோன்அம்புலன்ஸ், செஞ்சிலுவைச் சங்கங்கள் உள்ளிட்ட பல அமைப்புக்கள் இணைந்து ஒத்திகை நடவடிக்கையை மேற்கொண்டன. (ஒ-14-213)



உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தால் முல்லைத்தீவு கடற்கரையில் சுத்தம் செய்யும் செயற்பாடு அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த செயற்பாட்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழு உறுப்பினர் ஏராளமானோர் கலந்து கொண்டிருந்ததுடன் பொலிஸார் மற்றும் முல்லைத்தீவு இளையோர் ஆகியோரும் தங்களது பங்களிப்பினை வழங்கினர். (ய-159)



## நீர்வேலியில் நேற்று கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீர்வேலியில் கைக்குண்டு ஒன்று நேற்று பொலிஸாரால் மீட்கப்பட்டது.

காணி ஒன்றில் துப்புரவுப்பணிகளை முன்னெடுத்த நிலையில் அங்கு சந்தேகத்துக்கிடமான பொருளொன்றை துப்புரவாளர்கள் அவதானித்தனர்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் சந்தேகத்துக்கிடமான பொருளை அவதானித்து கைக்குண்டு என அடையாளம் கண்டனர். அதனையடுத்து நீதிமன்ற அனுமதியுடன் கைக்குண்டை மீட்கும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்தனர். (ஒ-14-125)



## வரணி ம.வி அதிபர் நேற்றுக் கடமையேற்பு

சாவகச்சேரி, ஜூன் 10

வரணி மத்திய கல்லூரியின் புதிய அதிபராக அதிபர் ஆ.தங்கவேலு நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கமைய நேற்றுக் காலை அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய அதிபரே வரணி மத்திய கல்லூரியின் அதிபராக நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றார். (ஒ-14-159)



## நீண்ட நாள்களின் பின் எரிபொருள் விநியோகம்

மன்னார், ஜூன் 10

மன்னாரில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் நீண்ட நாள்களின் பின் நேற்று எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

கடந்த சில நாள்களாக மன்னாரிலுள்ள எரிபொருள் நிலையங்களில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படவில்லை. இதனால் வாகன உரிமையாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வந்தனர்.

இந்தநிலையில் மன்னார் நகர்ப்பகுதியிலுள்ள இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் விநியோகம் இடம்பெற்றது.

மேலும் மன்னார் பள்ளிமுனை பிரதான வீதியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தில் மண்ணெண்ணெய் பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு 500 ரூபா வீதம் வழங்கப்பட்டது. (ச-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மக்களை வதைக்கும் தொழிற்சங்க நடவடிக்கை

மின்சாரம் என்பது மக்களின் வாழ்வியலுடன் இரண்டறக் கலந்து விட்ட சூழலில், நீண்ட மின் தடை என்பது தாங்கிக் கொள்ள முடியாததொன்று. இந்த நிலையில், இலங்கை மின் சார சபையின் பொறியியலாளர்கள் முன்னெடுத்த தொழிற் சங்க நடவடிக்கை கைவிடப்பட்டிருந்தாலும், அதன் பாதிப்பை மக்கள் எதிர்கொண்டிருந்தனர்.

தொழிற்சங்க நடவடிக்கைக்கு 4 நிபந்தனைகளை மின்சார சபையின் பொறியியலாளர்கள் முன்வைத்திருந்தனர். அதில் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள மின்சாரசபை சட் டத் திருத்தத்தை உடனே கைவிடவேண்டும் என்று கோரு கின்றனர்.

புதுப்பிக்கதக்க சக்தியில் ஒன்றான காற்றாலை மூலமான மின் உற்பத்திக்கு இந்தியாவின் அதானி குழுமத்துக்கு வழங்கிய ஒப்பந்தம் முறைகேடானது என்றும் அதனை போட்டித் தன் மையில் திறந்த கேள்வி கோரல் மூலமாக வழங்கவேண்டும் எனவும் இரண்டாவது கோரிக்கையை முன்வைக்கின்றனர்.

இவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய விடயங்கள்தான். எரிசக்தி அமைச்சரோ, புதுப்பிக்கதக்க சக்தி மூலமான மின் உற்பத்தியை தேசிய கட்டமைப்புக்குள் உள்ளீர்க்கும் வகை யில் சட்டத்திருத்தத்தை நிறைவேற்றியே தீருவேன் என்று குறிப்பிடுகின்றார். அதற்கு அவர் முன்வைக்கும் காரணங்கள் நியாயமானவை.

எரிபொருள் மூலமாக ஓர் அலகு மின்உற்பத்தியை மேற் கொள்வதற்கு செலவு செய்யும் தொகையில் அரைவாசிக்கும் குறைவான தொகையே, புதுப்பிக்கத்தக்க சக்தி மூலமாக உற்பத்தி செய்வதற்கு செலவாகும். எனவே மின்கட்டணங் களை அதிகரித்து மக்கள் தலையில் பாரத்தை சுமத்துவதை விட, புதுப்பிக்கத்தக்க சக்தி மூலமான மின் உற்பத்தியை தேசிய கட்டமைப்புக்குள் உள்வாங்கும் வகையில் சட்டத் திருத்தத்தை மேற்கொள்வேன் என்றும் குறிப்பிடுகின்றார்.

புதுப்பிக்கத்தக்க சக்தி மூலமான மின் உற்பத்தியை தேசிய கட்டமைப்புக்குள் உள்வாங்கும் விடயத்தில், கடந்த 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒவ்வொரு அரசாங்கமும் முயற்சி களை மேற்கொண்டாலும் அவை தனியார் மின் உற்பத்தி மாபியாக்களால் தடுக்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

மஹிந்த ஜனாதிபதியாக இருந்த காலத்தில் எரிசக்தி அமைச் சராக இருந்தவர் சம்பிக்க. அவர் அந்தப் பதவியிலிருந்து பின்னர் விலக்கப்பட்டார். அதற்குப் பின்னால் இருந்ததும் மாபியாக்கள்தான். இந்தியாவின் அதானி குழுமத்துக்கு மன் னாரிலிருந்து சிலாபம் வரையிலான இலங்கையின் கடற் கரையோரத்தை காற்றாலை மூலமான மின் உற்பத்திக்கு வழங்குவதற்கு கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டார். 2012 ஆம் ஆண்டே அது வழங்கப்பட்டிருந்தால், கிட்டத் தட்ட 2016 ஆம் ஆண்டிலிருந்து இங்கிருந்து தமிழகத்துக்கு மின்சாரத்தை விற்பனை செய்திருக்கமுடியும் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

புதுப்பிக்கத்தக்க சக்தி மூலமான மின் உற்பத்தியை தேசிய மின்கட்டமைப்புக்குள் உள்ளீர்ப்பதற்கு மின்சாரசபையின் பொறியியலாளர்களே முட்டுக்கட்டையாகச் செயற்படுகின் றனர் என்பது அவர்களின் இப்போதைய தொழிற்சங்க நட வடிக்கைக்கான கோரிக்கைகளிலிருந்து வெளிப்படையாகத் தெரிகின்றது.


இதற்கு மேலதிகமாக, வல்லரசுகளின் போட்டிக்களமாக மாறியுள்ள இலங்கையில், ஒவ்வொரு திட்டத்துக்கும் ஒவ் வொரு வல்லரசின் பின்னணியில் தொழிற்சங்கங்கள் இயங்கி எதிர்ப்புத் தெரிவிப்பதும் வாடிக்கையாகிவிட்டது.

அதானி குழுமத்துக்கு கேள்வி கோரலின்றி வழங்கப்படுவது தொடர்பில் கவலையடையும் தொழிற்சங்கம், யாழ்ப்பாணத் தின் மூன்று தீவுகளில் சீனாவுக்கு கேள்வி கோரலின்றி கலப்பு சக்தி ஊடான மின் உற்பத்திக்கு அனுமதி வழங்கப்பட்ட போது அமைதியாக இருந்தது ஏன்? இந்தக் கேள்வியே அவர் கள் யாரின் பின்னணியில் இப்போது தொழிற்சங்க நடவடிக் கையில் ஈடுபட்டார்கள் என்பதை அம்பலப்படுத்துகின்றது. 'மண்டையில இருக்கிற கொண்டையை மறந்திட்டீங்களே' என்றுதான் அவர்களைப் பார்த்துச் சொல்லவேண்டியி ருக்கின்றது.

எந்தவொரு போராட்டமும் மக்கள் ஆதரவு இல்லாமல் வெற்றியடைய முடியாது. அது தொழிற்சங்கப் போராட்டத் துக்கும் பொருந்தும். இலங்கை மின்சார சபை பொறி யியலாளர்களின் தொழிற்சங்கப் போராட்டத்தால் மக்களுக்கு அரசாங்கம் மீது வெறுப்பு வரவில்லை. மாறாக மின்சாரசபை பொறியியலாளர்கள் மீதே மக்கள் ஆத்திரமடைகின்றனர் என்பதைப் புரிந்து கொண்டால் சரி.

### நாளொரு நல்வார்த்தை

"எவரிடமும் எதையும் எதிர்பார்க்கா தீர்கள். அப்படி எதிர்பார்த்தால் இறுதி வரை எதையும் சாதிக்காமல் போய் விடுவீர்கள்" -எட்பஸ்ட் பர்ஸி




# சுமையேற்றும் தொழிற்சங்கத்தால் இலங்கை முன்னோக்கி நகராது!

## எரிசக்தி அமைச்சர் கடும் விமர்சனம்



**கொழும்பு, ஜீன் 10**

**நாட்டுக்குத் தேவையற்ற அழுத்தங்களை ஏற் படுத்தும் தொழிற்சங்கங்களால், ஒருபோ தும் நாடு முன்னோக்கிச் செல்லாது என்று கடுமை யாக விமர்சித்துள்ளார் எரிசக்தி அமைச்சர் காஞ் சன விஜயசேகர.**

இலங்கை மின்சார சபை சட்டத்தில் முன் வைக்கப்படவுள்ள திருத்தங்களுக்கு எதிர்ப் புத் தெரிவித்து, நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் காலவரையறையற்ற வேலைநிறுத் தத்தில் ஈடுபடவுள்ளதாக மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் அறிவித்ததை அடுத்தே எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜ யசேகர இவ்வாறு தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில் மேலும் உள்ளதாவது:-

நான் அவசியமான மாற்றங்களை மேற் கொள்ளத் தயாராகவுள்ளேன், திறமையற்ற, நாட்டின் பொருளாதாரத்துக்குச் சுமையாக வுள்ள அழுத்தம் கொடுக்கும் தொழிற்சங் கங்களால் இலங்கை முன்னோக்கி நகராது. பல தொழிற்சங்கங்கள் வர்த்தக நலனுக்கா கவோ அல்லது தங்கள் நிறுவனத்துக்காகவோ போராடுவதில்லை. மாறாக தங்களின் நல னுக்காகவே போராடுகின்றன. தடையற்ற மின்சாரத்துக்கும் குறைந்த செலவுடனான மின்சார உற்பத்திக்கும் மக்களுக்கு உரிமை யுள்ளது.

தற்போதுள்ள இலங்கை மின்சாரசபை சட் டத்தில் திருத்தங்கள் தேவையில்லை, புதுப் பிக்கதக்க சக்தித்திட்டங்களை தாமதமின்றி செயற்படுத்தும் திறன் அதற்குள்ளது என் றால் புதுப்பித்தக்க சக்தித் திட்டங்களை நடை முறைப்படுத்துவதற்காக பல ஆண்டுகளாக பலர் விடுத்த வேண்டுகோள்களை ஏன் அது நிராகரித்தது - என்றுள்ளது. (ம)

# சர்வதேச நாணய நிதியத்தால் ஓகஸ்ட்டுக்குள் சில சலுகை!

## அலி சப்ரி தெரிவிப்பு

கொழும்பு, ஜீன் 10

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத் துக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக இலங் கைக்கு சில சலுகைகள் கிடைக்கும் என முன்னாள் நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்று கையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததா வது:-

அடுத்தடுத்த மாதங்களில் சர்வதேச ஆதரவின் ஊடாக மருந்துப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய முடியும். ஓகஸ்ட் மாதத்துக்குள் இலங்கைக்கு சலுகைகள் கிடைக்க வாய்ப்புக்கள் உள் ளன. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் உலக சுகா தார நிறுவனத்திடம் இருந்து இலங்கைக்கு சாதகமான பதில் கிடைத்துள்ளது. இலங்கையை உறுப்பு நாடாகப் பாதுகாக்கும் நோக்கில் சர்வதேச நாணய நிதியம் செயற்பட்டு வருகின் றது - என்றார். (ம)

நாளை 11.06.2022 சனிக்கிழமை வைகாசி 28
சுபநேரம் : 02.52 - 04.22
ராகுகாலம்: 08.52 -10.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Babugi Muthulingam
20 h

"ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும்"
"வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும்"
என்பது உண்மை தான்....

சைக்கிளின் பலம் 💪






Wimal TA

-இனிவரும் இரண்டு வாரங்கள் பயமா இருக்கும்.

-அதுக்கு பிறகு நிலைமை சரியா வந்திருமா பிரதமரே..?

-சரியா வாறதா...? அதுக்கு பிறகுதான் படுபயங்கரமா இருக்கும்.












ஏழையின் பாசம் !



மாட்டை விலை பேசி வித்தாச்சு.. ஆனா..பாசத்தை விலைபேசமுடியல.. அழுவது மனிதன் மட்டுமல்ல..அந்த மாடும் தான்..

# யாதும் ஊரே யாவரும் கேளிர்

த.பாலகிட்ணபிள்ளை

பிள்ளைகளின் சுயசிந்தனை என்பது மாற்றுச் சிந்தனையொன்றின் மையப்புள்ளி. அதை மாற்று ஏற்பாட்டின் தொடக்கமாகவும் கருதலாம். வேறுவிதமாகச் சொல்வதாயின் பிள்ளைகளின் அறிவு மற்றும் மனவிருத்தி பல்கிப் பெருகுவதற்கும் அவர்கள் விரும்பும் வழியில் அவர்களோடு இணைந்து பயணித்து நல்லொழுக்கப் பிரஜைகளாக பரிணமிப்பதற்கும் அவர்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்படல் வேண்டும் என்பதையே இந்த 'சுயசிந்தனை' என்ற கோட்பாடு பறைசாற்றுகின்றது.

பல்லின கலாசார விழுமியங்களைக் கொண்ட ஒரு சமுதாயத்தில், பிள்ளைகள் அவர்கள் வாழும் சூழலில். இந்தக் கலாசாரத்தின் எந்த அம்சங்களை உள்ளடக்கி வாழவிரும்புகிறார்கள் என்பதை அறிய பல கலந்துரையாடல்கள், பல அவதானிப்புகள் செய்ய நீண்டநேரம் தேவைப்படலாம். சில மக்கள் தம் கலாசார, மதம் மற்றும் தனிப்பட்ட காரணங்களுக்காக தம்மைத்தாமே தனிமைப்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் உண்டு.

நாளாந்த வாழ்க்கையில் உங்கள் பிள்ளைகளில், கபடத்தனம், பொறாமை என்பன உருவாகும்போதே உடனடியாகக் களையப்படல் வேண்டும். பல வேளைகளில் இந்த நிலை அவர்களின் செயற்பாட்டில் தாக்கத்தினை உருவாக்கலாம். இந்த சமூக முரண் உணர்ச்சிகள் வயது வேறுபாடு, தோற்றம், பால்வேறுபாடு, தேக ஆரோக்கியமேம்பாடு, குடும்பம், இனம், கலாசாரம் இன்னும் எண்ணற்ற வேறுவழிகளில் ஏற்பட்டிருப்பினும் அது பிள்ளைகளின் வளர்ச்சியின்போது கற்றுணர் அனுபவத்தில் சார்புத் தாக்கங்களாக மாறுவதற்கு இடமுண்டு.

**பல்கலாசாரம் சார்ந்த கல்வி பிள்ளைகளுக்குக் காலத்தேவை**

பல்லின கலாசாரத்தை அதே தொடர்நிலையில் வைப்பதற்கு நீங்கள் மறந்து விடலாகாது. உலகிலுள்ள ஒவ்வொருவருக்கும் குடும்பம், வீடு, வாழ்க்கைமுறை என்பன தனியானது என்பதை உங்கள் பிள்ளைகள் உணர ஏதுவாக பல்கலாசார விளையாட்டுப் பொருள்கள், நாடகப் பாவனைப்பொருள்கள், காட்சி உபகரணங்கள், புத்தகங்கள், கதைகள், இசை, உணவு, விருந்தினர்கள் போன்றவை மூலம் பெறும் அனுபவ அறிவுடன் சுற்றுலாக்களும் ஏற்படுத்தப்படவேண்டும். இவ்வுணர்வுகளையும் அவற்றின் வேறுபாட்டுத் தன்மையையும் எமது பிள்ளைகள் உணர முற்படும் சந்தர்ப்பங்கள் மறுக்கப்படும் போது அவர்களுக்கு சமூகத்தில் மற்றவர்கள் மீது மதிப்பும் மெச்சுகையும் ஏற்படும் தன்மை எவ்வாறு உருவாகும்?



பிள்ளைகள் இயற்கையாகவே தமது வாழ்க்கைத் திருப்புமுனை வயதில் உலகம் பற்றி அறிவதில் அளவிலா ஆர்வம் கொண்டுள்ளவர்களாகவே காணப்படுகிறார்கள். அவர்கள் எதிர்மறையான விடயங்களில் செல்வாக்குச் செலுத்துவதில்லை. வயது வந்தவர்களிடையே காணப்படும் 'சுயத்துள் அடக்கி வைக்கும் தன்மையே' இன்றைய சமூகத்திலுள்ள பல பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்து விடுகிறது. பிள்ளைகளுக்கு, மற்றவர்கள் எமக்கு மிகவும் வேண்டியவர்கள். அவர்கள் இப்புவியின் மறுபக்கத்தில் இருப்பவர்களாயினும் சரி, நாம் [illegible] இருப்பவர்களாயினும் [illegible] வர்களாயினும் சரி, எல்லோருமே வேண்டியவர்கள் என்பதை உணர வைக்க வேண்டும். இது, பிள்ளைகளின் தேவையற்ற பயத்தை நீக்கி தமதும் வெவ்வேறு நாட்டினதும் அந்த நாடுகள் தொடர்பான பன்னாட்டறிவு மீது கவனம் செலுத்தும் தன்மை, அறிவு, சுயமாகவே மதிப்பிடும் தன்மையை வளர்த்துக் கொள்ள உதவும் என்பதில் ஐயமில்லை.

**கலாசார ஏற்புநிலையை உருவாக்கல் வேண்டும்**

பிள்ளைகளுக்கான கல்வி அறிவூட்டலில் உலகம் பற்றிய கல்வியைப் புகட்டுங்கள். அவர்கள் தேவை நோக்கியோ அன்றி விடுமுறைப் பிரயாணங்களிலோ செல்லும் இடங்கள் பற்றிய தகவல்களை வழங்கி பிள்ளைகளின் பரந்த அறிவைப் பெருக்க வழிசெய்ய உற்சாகப்படுத்துங்கள். பெற்றோர் வேலைநிமித்தம் வெளிநாட்டிலோ அன்றி வெளியூரிலோ இருப்பாராயின் உலகப்படத்தில் அல்லது அந்நாட்டு வரைபடத்தில் அவர்களின் பெற்றோர் இருக்குமிடத்தைக் காண்பித்துப் பெருமை கொள்ளச் செய்யுங்கள். சிறுபிள்ளைகளை மிக நீண்ட தூர இடங்களோடு தொடர்புபடுத்த வேண்டுமாயின், வேற்றுமொழிகளில் ஒருசில சொற்கள் அறியவைப்பதும், அழகிய கலை மற்றும் கலாசாரத்துடனான நாட்டியம், இசை என்பனவற்றைப் பார்த்து ரசிப்பதற்கும் அவர்களை ஊக்கப்படுத்துவது தவிர்க்க முடியாதது.

இதன்மூலம் அவர்கள், தாம் காணும் வேறுபாடுகளை மெச்சுவதற்கும் மனித இனம் என்ற வகையில் உள்ள பொதுத்தன்மை பற்றியும் ஓர் உலகத்தின் மக்கள் என்ற பகுத்தறிவையும் பெறுகிறார்கள்.

ஆசிரியர்கள் தமது கற்பித்தல் பாடங்களுடன் மேலதிகமாக பல்லினக் கலாசாரங்கள் பற்றிய அறிவூட்டல்களையும் பிள்ளைகளுக்கு வழங்கவேண்டும். மற்றவர் மதிப்பளிக்கும் தன்மைக்கும் உணர்வுகளுக்கும் கவனம் செலுத்துவதற்கு இவை தொடக்கப் புள்ளியாக அமையலாம். இம்மரபுகளைக் கட்டிக்காத்து அடுத்த தலைமுறைக்குப் பாரப்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பு ஒவ்வொரு தனிமனிதனுக்கும் முழுச் சமுதாயத்துக்கும் அவசியமென்பதை நாம் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். உங்கள் இதயபூர்வமான ஆர்வமும் ஒத்தாசையும் அவர்களுக்கு தமது கலாசார அடையாளங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கான நம்பிக்கையைத் தோற்றுவிக்கும். அது அவர்களை தனித்தன்மை உடையவர்களாகப் பரிணாமிக்கவும், நல்ல தலைவர்களாக உருவெடுக்கவும் காரணமாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நிதானமாகச் செயற்பட்டு நினைத்ததைச் சாதிப்பீர்கள். எதிர்பார்த்த தகவல் வரும். மறைமுகத் தொல்லை விலகும். பணவரவால் குடும்ப நெருக்கடி அகலும். உற்சாகமாக செயற்படுவீர்.

**இடபம்:** யோசித்து செயற்படுங்கள். முயற்சியில் இழுபறி நிலை இருக்கும். வீட்டில் பிரச்சினை வந்து விலகும். அலுவலகத்தில் மற்றவர்கள் பாராட்டுவர். பிள்ளைகள் பற்றி சிந்திப்பீர்கள்.

**மிதுனம்** : குடும்பத்தில் பிரச்சினை உருவாகும். உறவினர் விலகிச் செல்வர். நிதானம் தேவை. மனம் அலைபாயும். செயல்களில் கவனம் தேவை. நண்பரால் ஆதாயம் உண்டு.

**கடகம்:** எதிர்பார்த்த பணம் வரும். இன்று மேற்கொள்ளும் முயற்சி சாதகமாக அமையும். செல்வாக்கு உயரும். தந்தை வழி உறவினர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

**சிம்மம்:** கவனக்குறைவால் இழப்புகளைச் சந்திப்பீர்கள். நிதானமாகச் செயற்படுங்கள். உறவினர் தேடி வருவர். செல்வாக்கு உயரும். தள்ளிப்போன செயல்கள் முடியும்.

**கன்னி:** எதிர்பார்ப்பு நிறைவேறும். சாதகமான நிலை உருவாகும். பணவரவு திருப்தி தரும். அலுவலகத்தில் அதிகாரிகள் ஆதரிப்பர். செல்வாக்கு உயரும். பொன், பொருள் சேரும். நீண்டநாள் கனவு நிறைவேறும்.

**துலாம்:** அலைச்சல் அதிகரிக்கும். சிலர் வெளியூர் செல்வர். செலவுகள் உண்டாகும். வீடு, வாகன வகையில் செலவு கூடும். எதிர்பார்த்த வரவில் இன்று தடையுண்டாகும். குழப்பம் மேலோங்கும். முயற்சியில் தடுமாற்றம் வரலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் செல்வாக்கு உயரும். வேலைகளில் இருந்த தடைகள் அகலும். முயற்சி வெற்றி பெறும். திடீர் பணவரவால் சங்கடம் விலகும். யோகமான நாள். புதிய முயற்சியில் இலாபம் காண்பீர்கள்.

**தனுசு:** முக்கியமான வேலை ஒன்று முடியும். நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். புதிய தொழில் முயற்சியில் இறங்குவீர்கள். அரசு வகையில் நல்லசெய்தி வரும். முன்னேறுவீர்கள். செல்வாக்கு உயரும்.

**மகரம்:** முயற்சியில் தாமதம் ஏற்பட்டாலும் முடிவு சாதகமாகும். வரவு அதிகரிக்கும். குலதெய்வ அருளால் முயற்சி பலிதமாகும். எதிர்பார்த்த ஒன்றை அடைவீர்கள்.

**கும்பம்:** செயலில் தடுமாற்றம் உண்டாகும். எதிர்பார்ப்பு இன்று தள்ளிப்போகும். குழப்பம் உண்டாகும். மற்றவர் செயலால் சங்கடப்படுவீர்கள். புதிய முயற்சி இன்று வேண்டாம். எதிரிகளின் தொல்லை கூடும்.


**மீனம்:** அரசு வழி முயற்சிகள் அனுகூலமாகும். நண்பரால் உதவி உண்டு. விருப்பம் இன்று நிறைவேறும். மனதை வாட்டிய பிரச்சினை விலகும். புதிய வாய்ப்புத் தேடிவரும். அதனால் முன்னேற்றம் காண்பீர்கள்.

# புற்றுநோய் இனி பூரண குணமாகும்

## அமெரிக்காவில் மருந்து கண்டுபிடிப்பு

**வொஷிங்டன், ஜூன் 10**

**அமெரிக்க விஞ்ஞானிகளால் புற்றுநோயை 100 சதவீதம் குணப்படுத்தும் 'டோஸ்டார்லிமாப்' என்ற மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**



அமெரிக்காவின் மேன்ஹட்டானில் உள்ள ஸ்லோன் கெட்டரிங் நினைவு புற்றுநோய் மையத்தில் நடத்தப்பட்ட சோதனையிலேயே இந்த மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்து 18 குடற்புற்று நோயாளிகளுக்குக் கொடுக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. இந்த மருந்து மூலம் 100சதவீதம் அவர்கள் பூரண குணமடையவைத்துள்ளனர். அவர்களிடம் மேற்கொண்ட பரிசோதனையில் புற்றுநோய் உடலில் இல்லை என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

பொதுவாகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைபெறுவோருக்கு சிகிச்சைக்குப் பின் பக்கவிளைவுகள் காணப்படும். ஆனால் இவர்களுக்கு அவ்வாறான பக்கவிளைவுகள் எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து அமெரிக்க மருத்துவர் ஒருவர் தெரிவிக்கையில்,

புற்றுநோய் பாதிப்பு உள்ளவர்களுக்கு 'டோஸ்டர்லிமாப்' என்ற இந்த மருந்து மூன்று வாரங்களுக்கு ஒருமுறை என 6 மாதங்களுக்கு உடலில் செலுத்தப்படும். இதன் மூலம் இயற்கையாகப் புற்றுநோய் ஷெல்கள் அழிகின்றன.

எனினும் இந்த மருந்தை ஏனைய மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆய்வுசெய்து உறுதிசெய்ய வேண்டும். இன்னும் அதிக எண்ணிக்கையிலான புற்றுநோயாளிகளுக்கு வழக்கப்பட்டு, தொடர் பரிசோதனைகள் நடத்தப்பட்ட பின்பே இந்த மருந்து சந்தைக்கு வரும்- என்றார். (ச-இ)

# இந்தியா - வியட்நாம் இடையே இராணுவ ஒப்பந்தம் கைச்சாத்து

ஹனோய், ஜூன் 10


இந்தியா - வியட்நாம் இடையேயான உறவை விரிவுபடுத்தும் முகமாக இருநாடுகளிடையேயும் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

இந்திய இராணுவத் தளபதி ராஜ்நாத் சிங் 3 நாள் பயணமாக தென்கிழக்கு ஆசிய நாடான வியட்நாமுக்கு சென்றார். அங்கு அந்த நாட்டு இராணுவத் தளபதி ஜெனரல் பான் வான் ஜியாங்கை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பில் இருதரப்பு உறவை விரிவுபடுத்துவது குறித்து பேச்சு நடத்தப்பட்டது.

இதன்போதே இருநாட்டு இராணுவமும், பராமரிப்பு மற்றும் இதர பணிகளுக்கு தங்கள் இராணுவத் தளங்களை பரஸ்பரம் பயன்படுத்திக் கொள்ள அனுமதி அளிக்கும் என்ற ஒப்பந்தத்தில் இருநாடுகளும் கைச்சாத்திட்டன.

இந்தோ- பசிபிக் பகுதியின் ஸ்திரத்தன்மைக்கு இருநாடுகளின் இராணுவ மற்றும் பாதுகாப்பு உறவு பிரதான காரணியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# நயனை மணந்தார் விக்னேஷ் சிவன்

நடிகை நயன்தாரா - இயக்குநர் விக்னேஷ் சிவன் திருமணம் சென்னை மாமல்லபுரத்திலுள்ள நட்சத்திர விடுதியில் திரைப் பிரபலங்கள் முன்னிலையில்நேற்று பிரமாண்டமாக நடைபெற்றது.

கடந்த 6 ஆண்டுகளாக காதலித்து வந்த இருவரும் நேற்று திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர்.

நிகழ்வில் நடிகர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், பொலிவூட் சூப்பர் ஸ்டார் ஷாருக்கான், விஜய்சேதுபதி, சூர்யா, ஜோதிகா, கார்த்தி, எஸ்.ஜே.சூர்யா, விக்ரம் பிரபு, ஜெயம் ரவி ஆகிய நட்சத்திரங்களும், நட்சத்திர தம்பதிகளான உதயநிதி ஸ்டாலின் - கிருத்திகா, மணிரத்னம் - சுஹாசினி, சரத்குமார் - ராதிகா, இயக்குநர்கள் கே.எஸ்.ரவிக்குமார், கௌதம் வாசுதேவ் மேனன், அட்லி, சிறுத்தை சிவா, ஹரி, தயாரிப்பாளர் போனி கபூர் உள்ளிட்ட ஏராளமான திரைப்பிரபலங்களும் நயன்தாரா-விக்னேஷ் சிவன் திருமண விழாவில் பங்கேற்று வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# ஈரானில் ரயில் விபத்து; 22 பேர் உயிரிழப்பு



தெஹ்ரான், ஜூன் 10

ஈரானில் இடம்பெற்ற ரயில் விபத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளதுடன் 90 பேர் வரையில் படுகாயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தபாஸ் நகரில் இருந்து யாஸ்ட் நகருக்குப் பயணித்த பயணிகள் ரயில் தண்டவாளத்தில் இருந்து திடீரென இறங்கியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் மீட்பு படையினரும், அந்த நாட்டு பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர். (ச-இ)

# உக்ரைனுக்கு உலகவங்கியால் மேலும் 1.5 பில்லியன் நிதி

கீவ், ஜூன் 10




உக்ரைனுக்கு மேலும் 1.5 பில்லியன் டொலர் நிதியுதவி வழங்கவுள்ளதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

ரஷ்யா - உக்ரைன் போரால் உக்ரைனின் பொருளாதார உட்கட்டமைப்பு வெகுவாகச் சிதைவடைந்துள்ளது. அத்துடன் தானிய ஏற்றுமதிகளும் தடுக்கப்பட்டுள்ளன. இதன்காரணமாக எதிர்வரும் சில மாதங்களில் உக்ரைன் பெரும் பொருளாதார நெருக்கடியை சந்திக்கவுள்ளது. இதனை உக்ரைன் தாக்குப்பிடிக்கவே உலக வங்கியால் 1.5 பில்லியன் டொலர் நிதி வழங்கப்படவுள்ளது என உலக வங்கியின் தலைவர் டேவிட் மல்பாஸ் தெரிவித்துள்ளார். இதே வேளை உக்ரைனுக்கு இதுவரை உலகவங்கியால் 4 பில்லியன் டொலர் நிதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எத்தனை அழிவுகள் வந்தாலும்

# அடக்குமுறையை அரசு நிறுத்தாது!

### கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 10

**இலங்கை எத்தனை அழிவைச் சந்தித்தாலும், பட்டினியால் மக்கள் இறக்கும் நிலை வந்தாலும் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளை அரசு நிறுத்தப் போவதில்லை எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'மூன்று வேளை உணவுக்குக்கூட வழியில்லாமல் நாட்டு மக்கள் தவிக்கின்றார்கள். நாடு பற்றியெரிகின்றது. ஆனால், வடக்கில் சிங்கள பௌத்த மயமாக்கல் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது. குறிப்பாக முல்லைத்தீவில் கடற்படை முகாம் ஒன்றை அமைக்க கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ள 600 ஏக்கர் காணி அளவீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு காணி உரிமையாளர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தபோது பாதுகாப்புப் படையினரால் அவர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். இதன்போது சுயாதீன ஊடகவியலாளரான கணபதிப்பிள்ளை குமணன் கடற்படையினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளார்' -என்றார்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இதன்போது கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்தினார். (ம-22)

## 'பஞ்சத்திலிருந்து மீண்டெழுவோம்'

### ஒட்டுசுட்டானில் விழிப்புணர்வு

முல்லைத்தீவு, ஜூன் 10

பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாட்டைக் குறைக்கும் முகமாக ஒட்டுசுட்டானில் விழிப்புணர்வுப் பரப்புரை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

'உணவுப் பஞ்சத்திலிருந்து மீண்டெழுவோம்' என்ற தொனிப்பொருளில் முல்லைத்தீவு விவசாயத் திணைக்களத்தால் இந்த விழிப்புணர்வுப் பரப்புரை முன்னெடுக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள தச்சடம்பன், தண்டுவான், முத்தையன்கட்டுகுளம், கணேசபுரம், கற்சிலைமடு, ஒட்டுசுட்டான் மற்றும் புளியங்குளம் ஆகிய விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் இடம்பெற்றது.

வீட்டுத்தோட்ட செய்கை, கிழங்கு பயிர்செய்கை ஆகியவற்றை ஊக்குவித்தல் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

மேலும் சேதனவளமாக்கிகள், தாவரபீடைநாசினிகள், விவசாயச் செய்கைக்கு தேவையான உள்ளூர் அவரையின விதைகள், மரவள்ளி நடுகைத் துண்டுகள் மற்றும் ஏனைய விதை உள்ளீடுகள் விற்பனையும் இடம்பெற்றன. (ச-19)

## கசிப்புடன் ஒருவர் கைது

ஆனைக்கோட்டை - மானிப்பாய் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 53வயதான ஒருவர் மானிப்பாய் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து ஆயிரத்து 17 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதுடன், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ய-125)

## மாற்றுத்திறனாளிகளுக்கு ஆசன ஒதுக்கீட்டை உறுதிப்படுத்தக் கோரி விசேட விழிப்புணர்வு

மன்னார், ஜூன் 10

பொதுப் போக்குவரத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆசன ஒதுக்கீட்டை உறுதிப்படுத்த கோரி தேனீ மாற்றுத்திறனாளிகள் அமைப்பால் விசேட விழிப்புணர்வு நிகழ்வு மன்னார் பிரதான பேருந்து நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

பொதுப் போக்குவரத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரயாணிகளோ அல்லது போக்குவரத்து நடத்துநர்களோ ஆசனங்களை வழங்குவதில்லை. இதனையடுத்தே மன்னார் மாவட்டத்தின் தேனீ மாற்றுத்திறனாளிகள் அமைப்பு தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து பஸ்களில் இவர்களுக்கான ஆசன ஒதுக்கீடுகளுக்கான விழிப்புணர்வு நடவடிக்கையை முன்னெடுத்தது.

இந்த நிகழ்வில் அரச மற்றும் தனியார் போக்குவரத்து பேருந்துகளில் மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டதுடன் மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. (ய-60)



சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் அ.நிமலரோகனின் வேண்டுகோளுக்கு அமைய மறவன்புலோ பகுதியிலுள்ள 65 பேருக்கு இலவசமாக கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (ய-159)

# வணிகபீடம், தொழிற்றுறை மன்றம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து




யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்றுறை மன்றம் மற்றும் யாழ்ப்பாணம் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் ஆகியவை இணைந்து தொழில்முயற்சி பற்றிய விழிப்புணர்வை எதிர்காலத்தில் மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் செயற்படவுள்ளன.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட சபா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம், மாணவர்களுக்கு தமது பட்டப்படிப்பின் ஓர் அங்கமாக அமைந்துள்ள உள்ளகப் பயிற்சிக்கான வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளல், மாணவர்களுக்குப் பகுதிநேர வேலைவாய்ப்பை வழங்குதல், யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்றுறை மன்றம் செயற்படுத்தும் செயற்றிட்டங்களில் மாணவர்கள் நேரடியாக பங்குபற்றி பயிற்சிகளைப் பெற்று அறிவை விருத்தி செய்தல், மாணவ தொழில்முயற்சியாளர்களின் உள்நாடு மற்றும் சர்வதேச மட்டத்தில் புதிய உற்பத்திக்கு அங்கீகாரம்பெற வழிசெய்தல், சந்தைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற பல்வேறு நன்மைகளை மாணவர்கள் பெறலாம்.

மேலும் மாணவர் தொழில் முயற்சியாளர்களை யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தின் அங்கத்தவர்களாக இணைத்துக்கொள்வதுடன் ஆண்டுதோறும் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தால் நிகழ்த்த தீர்மானிக்கப்பட்டிருக்கும் 'இளம் தொழில் முயற்சியாளர்' தினத்தில் சிறந்த மாணவர்களுக்கான விருதையும் மாணவர்கள் பெற்றுக் கொள்ளமுடியும்.

அதேபோல் யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தின் அங்கத்தவர்களுக்குத் தேவையான பயிற்சிகள், பயிற்சிப் பட்டறைகள், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், போன்றனவற்றுக்கு வளவாளர்களாக முகாமைத்துவ வணிக பீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் பங்குபற்றல், குறுகியகால டிப்ளோமா கற்கைநெறிகளை முன்னெடுத்தல் முலமாக வர்த்தகத் துறை அங்கத்தவர்க



ளின் தொழில் சார் அறிவை பெருக்கி கொள்ள உதவுதல், தொழிற்றுறை நடவடிக்கைகளில் ஏற்படுகின்ற நெருக்கடி நிலைமையைச் சிறந்த முறையில் முகாமை செய்வதற்குரிய தந்திரோபாய ஆலோசனைகள் மாணவர்களிடமிருந்து பெறுதல் ஆகியவை மூலம் தொழிற்துறையின் செயற்பாட்டையும் மேம்படுத்த உதவும்.

இதன் பயனாக தொழில்முயற்சி பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் கவனம் செலுத்தவுள்ளன. (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரதம கொறடா குற்றவாளியெனின் அவருடன் நான் அமரவேமாட்டேன்!

### நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

அரசாங்கத்தின் பிரதம கொறடா குற்றவாளி என உயர் நீதிமன்றால் தீர்ப்பளிக்கப்பட்டால் நான் அவருடன் அமரப்போவதில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில், 'எதிர்க்கட்சி பிரதம கொறடா நீதிமன்றத்தால் கடுமையான குற்றச்சாட்டுக்கு உள்ளானவர். 'மிஸ்டர் க்ளீன்' இவ்வளவு கேவலமான அமைப்பாளருடன் இருக்க முடியுமா? எனவும் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த ரணில், 'கொழும்பு உயர்நீதிமன்றம் அவருக்கு எதிராக தீர்ப்பளித்துள்ளது. இரண்டு முறை மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்துக்குச் செல்ல அவருக்கு உரிமை உண்டு. அவர் குற்றவாளி என்று மேன்முறையீடுகளிலும் கண்டறியப்பட்டால், அவரால் இங்கு உட்கார முடியாது. ஆனால் அப்படி ஒரு முடிவு வரும்வரை நான் இங்கேயே இருப்பேன். பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டிக்கப்படும் வரை நாங்கள் காத்திருந்தோம்' -என்றார். (ம)

## எந்த அமைச்சரவையிலும் மஹிந்த பங்கேற்கவில்லை

### பந்துலவுக்கு நாமல் பதிலடி

கொழும்பு, ஜூன் 10

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவியிலிருந்து விலகியதன் பின்னர் எந்தவொரு அமைச்சரவைக் கூட்டத்திலும் கலந்துகொள்ளவில்லை என முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ருவிற்றர் பதிவொன்றை வெளியிட்டு நாமல் ராஜபக்ச இதனைத் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச கலந்துகொண்டார் என அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்த நிலையில் அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே நாமல் ராஜபக்ச இவ்வாறு தெரிவித்தார். (ச-இ)

## 5 மாதங்களில்

# வெளிநாட்டு கையிருப்பு முதற்தடவை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 10

**இலங்கையின் வெளிநாட்டுக் கையிருப்பு ஐந்து மாதங்களில் முதற்தடவையாக அதிகரித்துள்ளது என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.**

மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், உத்தியோகபூர்வ வெளிநாட்டுக் கையிருப்புச் சொத்துக்கள் ஏப்ரல் மாதத்தில் ஆயிரத்து 812 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தநிலையில் மே மாதத்தில் ஆயிரத்து 920 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

ஏப்ரல் மாதத்தில் ஆயிரத்து 602 மில்லியன் டொலராக இருந்த வெளிநாட்டுக்கையிருப்பு மேமாதத்தில் ஆயிரத்து 805 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.

தற்போது தங்கத்தின் கையிருப்பு 28 மில்லியன் அமெரிக்க டொலராக உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

### உதிரிப்பாகங்களின் விலை ஏற்றம்

## போக்குவரத்துக் கட்டமைப்பு முற்றாகச் சரிவு நிலையில்!

கொழும்பு, ஜூன் 10

வாகன ரயர்கள் மற்றும் இதர உதிரிப்பாகங்களின் விலை சுமார் 100 சதவீதம் அதிகரித்துள்ள காரணத்தால், பொதுப்போக்குவரத்து உட்பட ஒட்டுமொத்த போக்குவரத்துக் கட்டமைப்பும் வீழ்ச்சியடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் துறைசார் அதிகாரிகள் தெரிவித்ததாவது:

மின்கலன்கள் மற்றும் வாகன 'சேர்விஸ்' கட்டணங்கள் என்பன கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளன.

50 ஆயிரத்தில் இருந்த பேருந்து ரயரொன்றின் விலை 75 ஆயிரம் முதல் 80 ஆயிரம் ரூபா வரை உயர்ந்துள்ளது.

சுமார் 6 மாதங்களுக்கு முன்னர் 21 ஆயிரம் ரூபாவாக காணப்பட்ட உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட லொறி ரயர் தற்போது 34 ஆயிரம் ரூபா முதல் 40 ஆயிரம் ரூபா வரை உயர்ந்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட ரயர் 45 ஆயிரம் ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றது.

இதன் காரணமாக போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டு வரும் பலர் தொழிலை விட்டு வெளியேறுகின்றனர் -என்றனர். (ம)

## வெளிநாடுகளிலிருந்து போதை மாத்திரைகள்

கொழும்பு, ஜூன் 10

ஜேர்மனி மற்றும் நெதர்லாந்தில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட சுமார் 20 மில்லியன் ரூபா பெறுமதியான ஆயிரத்து 985 போதை மாத்திரைகளை சுங்க போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்களின் உதவியுடன் குறித்த போதைப்பொருளைக் கைப்பற்றியுள்ளனர்.

விசாரணையின் பின்னர் குறித்த போதைப்பொருள் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக சுங்கப்பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ய-இ)



## விவசாயிகளுக்கு இரசாயன உரம்

கொழும்பு, ஜூன் 10

விதைநெல் உற்பத்திக்காக விவசாயிகளுக்குத் தேவையான இரசாயன உரத்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நடப்பாண்டுக்கான சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் இரசாயன உரம் கிடைக்காமையால் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

அதற்கமைய 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுக்கான பெரும்போகத்துக்குத் தேவையான தரமான விதை நெல்லை பெற்றுக் கொள்ளும் வகையில் இரசாயன உரத்தை வழங்க விவசாய அமைச்சால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

மகாவலி வலயத்துக்குட்பட்ட 9 மாகாணங்களிலும் விதை நெல் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ள 6 ஆயிரத்து 774.3 ஹெக்ரேயர் விவசாய காணிக்கு உரம் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை இம்முறை சிறுபோகத்தில் விதை நெல் உற்பத்திக்கு தேவையான ஒரு லட்சத்து 47ஆயிரம் புசல் விதை நெல்லை தனியார் துறையினர் ஊடாக விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட பலர் கடவுச்சீட்டை ஒப்படைக்க தவறினர்

### நீதிமன்ற உத்தரவு புறக்கணிப்பு

கொழும்பு, ஜூன் 10

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட பல அரசியல்வாதிகள் தத்தமது கடவுச்சீட்டை ஒப்படைக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள போதிலும், அவர்கள் இன்னமும் தமது கடவுச்சீட்டை உரியவாறு பாரப்படுத்தவில்லை என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பான வழக்கு கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே குற்றப்புலனாய்வுப் பிரிவின் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஆயிஷா ஜினசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிஷாந்த, ரேணுகா பெரேரா மற்றும் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் மஹிந்த கஹந்தகம உள்ளிட்ட பலர் இதுவரையில் தமது கடவுச்சீட்டுக்களை நீதிமன்றக் காவலில் ஒப்படைக்கத் தவறியுள்ளனர். இவர்களில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிஷாந்த, ரேணுகா பெரேரா மற்றும் மஹிந்த கஹந்தகம ஆகியோர் தங்களுடைய கடவுச்சீட்டு தமது வீட்டில் வைத்து எரித்து நாசமாக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவித்துள்ளனர்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட பலருக்கு பயணத் தடை விதித்து மே 12ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீலங்களின் போர் இன்று ஆரம்பம்!


கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்


கிளிநொச்சி இந்துக் கல்லூரி

கிளிநொச்சி, ஜூன் 10
நீலங்களின் போர் என்று வர்ணிக்கப்படும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்துக்கும் கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டம் இன்று ஆரம்பமாகின்றது.
கிளிநொச்சி மத்திய மாகா வித்தியாலய அணி எஸ்.பிரதீப் தலைமையில் களமிறங்குகின்றது. அந்த அணியில், என். பிரணித், ரி.அபிராஜ், எஸ்.அருஸ்வெட்ஸி, கே.திருமாறன், எஸ்.சுலக்சன், கே.சயந்தன், ரி.தஜீபன், பி.பாவலன், ரி.தமிழன், ஏ.நிறோஜிதன், என்.சானுஜன், என்.சன்றோன், எம்.துவாரகன், எம்.பவித்திரன், வி.வினித், கே.கோகுலன், கே.சஜன்சந்தோஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.
கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி ஏ.டெனுராஜ் தலைமையில் களமிறங்குகின்றது.
அந்த அணியில், கே.பகலவன், எஸ். அனுரதன், ரி.தமிழ்வாணன், வி.தனோஜ், பி.தனுசன், கே.கோகுலதர்சன், ரி.தமிழ்பிரியன், ஜே.அருண்குமார், எஸ்.நிலவன், என்.அன்புக்குமரன், என்.பவிசன், எம்.ஜதார்த்தனன், கே.ஹரிசாந்தன், கே.நீனுஹன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ம)

## விடுதி திறப்பு விழா

உரும்பிராய் தெற்கு முதலாம் ஒழுங்கையில் வயிரவப்பிள்ளை கந்தசாமியின் நிதியில் அமைக்கப்பட்ட உயர் கல்வி மாணவர்களுக்கான இலவச விடுதியின் திறப்பு விழா, நாளைமறுதினம் ஞயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் கனகசபாபதி கனகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ.14)

## நூல் வெளியீடு

அளவெட்டிசைவவாலிப சங்கத்தின் 'ஞானத் தேர்' என்ற ஆவணத் தொகுப்பு நூல் வெளியீடு, நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் திருமணமண்டப வளாகத்தில் இடம்பெறவுள்ளது. (ஒ-14)

# மேன்முறையீடு நிராகரிக்கப்பட்ட அதிபர்களுக்கு இடமாற்றம்!

யாழ்ப்பாணம், ஜூன் 10
வடமாகாணத்தில் மேன்முறையீடு நிராகரிக்கப்பட்ட அதிபர்களுக்கு, எதிர்வரும் வாரம் முதல் இடமாற்றம் நடைமுறைப் படுத்தப்படும் என வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் தெரிவித்தார்.
யாழ். மாவட்டத்தில் தீவகம் தவிர்ந்த யாழ், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாம வலயம் ஆகியவற்றில் இருந்து ஆசிரியர் நியமனத்திலும் அதிபர் நியமனத்திலும் இதுவரை வெளிமாவட்டம் செல்லாத சுமார் 47 பேர் அடையாளங் காணப்பட்டனர். இதையடுத்து, அவர் களில் முதற்கட்டமாக 27 பேருக்கு வெளிமாவட்டத்துக்கு வடக்கு கல்வி அமைச்சின் செயலாளரால் பணியிட மாற்றம் வழங்கப்பட்டது.
பணி இடமாற்றம் வழங்கப்பட்ட அனைவரும் மேன்முறையீட்டை சமர்ப்பித்த நிலையிலும், முறையான காரணங்கள் தெரிவிக்கப்படாத காரணத்தால் சில மேன்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு மேன்முறையீடுகள் நிராகரிக்கப்பட்ட அதிபர்களுக்கே அடுத்த வாரம்முதல் இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-125)


தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கு இணுவிலை சேர்ந்த இராசையா குகவரதனின் தாயாரின் நினைவாக நேற்று சிவபூமி அறக்கட்டளையூடாக மருந்துத் தொகை கையளிக்கப்பட்டது. (ச-இ)



# சிரமதானமும் மரநடுகையும்

யாழ்ப்பாணம், ஜூன் 10
சர்வதேச சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்கரைப் பகுதியில் சிரமதானமும் மரநடுகையும் நேற்று முன்னெடுக்கப்பட்டது. வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் அமைச்சின் உத்தியோகத்தர்கள் சிரமதானத்தை மேற்கொண்டனர். அதனைத்தொடர்ந்து மரநடுகையும் இடம்பெற்றது. வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற சிரமதானத்தில், விவசாய அமைச்சின் செயலாளர், யாழ்.மாநகர முதல்வர், யாழ். மாநகர ஆணையாளர், மாநகர சுகாதாரக் குழுத் தலைவர், யாழ்.மாநகரசபை உத்தியோகத்தர்கள், விவசாய அமைச்சு உத்தியோக்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ஒ-14, 20)

# சிவில் அமைப்புக்கள், பொலிஸாரிடையே கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூன் 10
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட சிவில் சமூக அமைப்புக்கள், பச்சிலைப்பள்ளிப் பிரதேச கிராம அலுவலர்கள் ஆகியோருக்கும் பளை பொலிஸ் பதில் பொறுப்பதிகாரிக்குமிடையில் விஷேட கலந்துரையாடல் ஒன்று பளை பொலிஸ் நிலைய வளாகத்தில் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்றது.
பளைப் பிரதேசத்தில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாகவே கலந்துரையாடல் இடம்பெற்றது.
பளை பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத சம்பவங்கள் தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கினால் சம்பவ இடங்களுக்குப் பொலிஸார் வருவதற்கு தாமதமாகின்றது. அத்துடன் மணல்கொள்ளை, சிறுவர்கள் போதைக்கு அடிமையாதல் போன்ற சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என சிவில் அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டது. இதன்போது மக்களுக்கான சிறந்த சேவையை வழங்குவதுடன் குறித்த குற்றச்சாட்டுக்களை விரைந்து விசாரிப்பதாகப் பொலிஸார் உறுதியளித்தனர். (ஒ-14.113)

# மண்டைதீவுப் பகுதியில் கண்டல் தாவரம் நடுகை

யாழ்ப்பாணம், ஜூன் 10
உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கண்டல் தாவரம் நடுகை செயற்றிட்டம் மண்டைதீவுப் பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.
யாழ்.மாவட்ட வன வளப் பாதுகாப்புத் திணைக்களப் பொறுப்பதிகாரி தலைமையில் கண்டல் தாவரங்கள் நடுகை செய்யப்பட்டன.
அதனைத்தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்குக் கண்டல் தாவரம் தொடர்பான விழிப்புணர்வும் முன்னெடுக்கப்பட்டது.
யாழ்.மாவட்ட வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை மாணவர்கள், மத்திய சுற்றாடல் அதிகாரசபை உத்தியோகத்தர்கள், வன விரிவாக்கல் உத்தியோகத்தர்கள், வன அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஒ-14,125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 28.04.2022 வியாழக்கிழமை
சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவன்

### அமரர் நாகேந்திரம் ஜெகன்

அவர்களின் மரணச்செய்திகேட்டு அவரின் இறுதிச்சடங்கில் பங்குபற்றிய அனைவருக்கும், சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும், அலைபேசி மூலம் தொடர்புகள் கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், நாளை (11.06.2022) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளிலும் கலந்து கொள்வதோடு, மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உடுத்துறை வடக்கு,
கொடுக்குளாய், ஆழியவளை

மனைவி உதயகல்பனா, பிள்ளைகள்,
அப்பா, அம்மா,சகோதரர்கள்
0772726467

## மரண அறிவித்தல்

### திருமதி சாதுசிகாமணிப்பிள்ளை குணலட்சுமி



யாழ்ப்பாணம் உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாதுசிகாமணிப்பிள்ளை குணலட்சுமி அவர்கள் நேற்று (09.06.2022) வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 193, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள அன்னாரின் மருமகனாகிய திரு.கு.மோகன் (கிச்சான்) அவர்களது வீட்டில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியை களுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகள்: மோ.சறோஜினி

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 03 . 1947



மறைவு 09 . 06 . 2022

### செல்லத்துரை சக்திதாசன்

(ஓய்வு பெற்ற மருந்தாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

வட்டு கிழக்கு சித்தங்கேணியை பிறப்பிடமாகவும், அராலி மேற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சக்திதாசன் (ஓய்வு பெற்ற மருந்தாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) நேற்று (09.06.2022) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், அம்பிகாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், பேரின்பரஜனியின் (ஓய்வு நிலை ஆசிரியர்) பாசமிகு கணவரும், தர்மராஜா (லண்டன்), ஸ்ரீமகாதேவி, சிவஞானதேவி ஆகியோரின் அன்புச்சகோதரனும் சுபாங்கன், சுகந்தன், சுரேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆரணி, சுபகரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அனன்யன், ஆயகி, சந்தோஷ் ஆகியோரின் அன்புப்பேரனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2022) வெள்ளிக்கிழமை அராலி மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் மாலை 3.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை

தகவல்:
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26 . 05 . 1974

மறைவு 22 . 05 . 2021

### அமரர் உமா குமாரவேலு

(B.A(Hons) Spl Trd ENGLISH)
(ஆசிரியர் யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை)

திதி : 10.06.2022

ஓராண்டு நீங்கினாலும்
உன் வண்ணமும் எண்ணமும்
உணர்வுகளும்
என்றும் எம்மை விட்டு
நீங்காதம்மா.

ஓம் சாந்தி!

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

வண். வடமேற்கு,
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

தொலைபேசி:
077 6031 202

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 07 . 1935



இறப்பு 08 . 06 . 2022

### அருட்சகோதரி. டனியலா சவிரிமுத்து

யாழ் மாகாண திருக்குடும்ப சபையைச் சேர்ந்த அருட்சகோதரி டனியலா சவிரிமுத்து அவர்கள் 08.06.2022 புதன்கிழமை அன்று இறைவனுள் இயற்கை எய்தியுள்ளார். அன்னார் கரம்பொன்னைப் பிறப்பிடமாகக் கொண்ட சவிரிமுத்து எமலியா தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரியும் ஸ்ரெலா சேவியர் (கனடா), அருட்சகோதரி எமறிற்றா சவரிமுத்து (திருச்சிலுவை கன்னியர் சபை) ஆகியோரின் பாசமிகு மூத்த சகோதரியும் மரியா மாலினி ஜோசப் (கனடா), கனிஸ்ரன் சேவியர் (நீர்கொழும்பு), டோமினிக் சேவியர் (கனடா), கமிலஸ் சேவியர் (கனடா), பொஸ்கோ சேவியர் (கொழும்பு), அசம்ரா ரமேஸ் (யாழ்ப்பாணம்), டெலான் சேவியர் (கொழும்பு) ஆகியோரின் அன்புமிகு பெரிய தாயும் ஜோசப் அருள், பவானி பிறீடா, யான்சி, சுஜாந்தி, ரமேஸ் தம்பிராஜா, சில்வி ஆகியோரின் அன்பு மாமியாரும் அனுசியா, எலிசியா, பிராங்க், அலிசியா, ஏஞ்சல், டியோன், ரெறோன், மாறியோ, றிகான், ஜோன் ஸ்ரெபான், ஜோய், லெக்ஸ் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலியானது இன்று (10.06.2022) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் பாஷையூர் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
பொஸ்கோ சேவியர்
டெலான் சேவியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞர்களிடையே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு உள்ளாகியுள்ளனர். நண்பர்களிடையே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தொன்றில் ஏற்பட்ட முரண்பாடே மோதலுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இளைஞர் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியது என்றும், இரு குழுக்களும் ஆபத்தான ஆயுதங்களைக் கொண்டு தாக்கிக் கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மோதல் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மல்லாவி சேர்க்கப்பட்டனர். இருவர் வவுனியா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டிருந்த நிலையில், அவர்களில் ஒருவரே உயிரிழந்துள்ளார். ஏனையோர் கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மல்லாவிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-19)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணெண்ணெய் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயிகளுக்காகக் கடந்த திங்கட்கிழமை 33 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் மேலும் 19 ஆயிரத்து 200 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று மீனவர்களுக்காக குருநகர், மயிலிட்டி, தாழையடியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு நேற்று மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கும் நேற்றுமுன்தினம் மாலை மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு விரைவில் மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-இ)


# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21 . 07 . 1951

மறைவு 10 . 06 . 2021

வைத்திய கலாநிதி பயன்

## கந்தையா இராஜரெட்ணம்

(யாழ் இரெட்ணம் வைத்தியசாலை உரிமையாளர் - புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவர், சமாதான நீதவான்)

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்<br>
எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்<br>
அன்போடும் பண்போடும் எம்மை வளர்த்து<br>
அறிவூட்டி எம்மை வாழவைத்த அன்புத் தந்தையை<br>
இழந்து தனியாய் தவிக்கின்றோம்<br>
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்திக்கின்றோம்.

No. 129,<br>
புகையிர நிலைய வீதி,<br>
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுடன் என்றும் வாடும்:<br>
மனைவி, பிள்ளைகள்,<br>
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(cs 45118) (2.6)

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## வயிரவநாதர் மயூரன்

(VM URAN Enterprise)

மண்மகிழ 01.04.1979

கண்நெகிழ 09.06.2014

மீளாத்துயில் கொண்டு எம்மை<br>
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீர்கள் - அப்பா<br>
கலையாத நினைவுகளுடன்<br>
உதிரும் கண்ணீர் பூக்களால்<br>
உங்களை அர்ச்சிக்கின்றோம்.

என்றென்றும் ஈரவிழிகளுடன்<br>
மனைவி, பிள்ளைகள்,<br>
மற்றும் குடும்பத்தினர்.

கச்சாய் வீதி,<br>
கொடிகாமம். (cs. 45088) (2.6)

# வேலையாட்கள் தேவை

A9 வீதி முறுகண்டியில் இயங்கும் சைவ உணவகம் ஒன்றிற்கு பின்வரும் பணி நிலைகளுக்கு வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

- காசாளர்
- உணவு பரிமாறுபவர்
- சிட்டை எழுதுனர்
- சமையலாளர்
- சமையல் உதவியாளர்

ஆர்வமுள்ளவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

077 386 6250

# மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 80 ரூபாய் பூச்சுவலை, கட்டுவேலைகளும் செய்துதரப்படும் .

077 334 1281 (cs 9081) (7.6)

# மரண அறிவித்தல்



அருட்சகோதரி

## டனியலா சவரிமுத்து தி.கு

கரம்பன், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி டனியலா சவரிமுத்து தி.கு (08.06.2022) புதன்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 10.06.2022 வெள்ளிக் கிழமை பி.ப 3.00 மணிக்கு பாஷையூர் திருக்குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர். யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல் :<br>
அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்<br>
மாகாணத் தலைவி.

121, பிரதான வீதி,<br>
யாழ்ப்பாணம். (cs cs 45123)

# மரண அறிவித்தல்



மலர்வு 15 . 02 . 1979

உதிர்வு 08 . 06 . 2022

## திருமதி பிரபாகரன் பிறேமலதா

உடுத்துறை வடக்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பிரபாகரன் பிறேமலதா அவர்கள் (ஆசிரியை, யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்) கடந்த (08.06.2022) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் இராஜேந்திரம் - யோகலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சௌந்தரநாயகம் - மனோரஞ்சிதமலர் தம்பதியரின் அன்பு மருமகளும், பிரபாகரனின் பாசமிகு மனைவியும், பிரகதீஸின் அன்புத் தாயாரும், பிறேமானந்தன் (நோர்வே), பிறேம்குமார் (சுற்றாடல் உத்தி யோகத்தர், மத்திய சுற்றாடல் அதிகார சபை, கிளிநொச்சி), விஜிதகுமார் (சுவிஸ்), அருள்தாஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஹேமா (நோர்வே), வினோதினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி), கார்த்திகா (சுவிஸ்), கீர்த்தி (லண்டன்), பிரதாபன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2022) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 8.30 மணிக்கு உடுத்துறை இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடுத்துறை வடக்கு,<br>
ஆழியவளை.

தகவல்:<br>
குடும்பத்தினர்

(CS 11776)

# மரண அறிவித்தல்



## தர்மலிங்கம் யோகேஸ்வரன்

(ஓய்வு நிலை ஆசிரியர்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மற்றும் வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் யோகேஸ்வரன் நேற்று (09.06.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - நவமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், இரத்தினேஸ்வரியின் (ஓய்வுநிலை ஆயுள் வேத வைத்திய அதிகாரி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற ரத்தினராசா மற்றும் கோணேஸ்வரன் (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இராஜராஜேஸ்வரி மற்றும் இராஜராஜேஸ்வரன் (ஓய்வுநிலை மிருக வைத்தியர்), நாகராஜேஸ்வரன் (ஓய்வுநிலை பொறியியலாளர்), நாகராஜேஸ்வரி, தியாகராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரன் (ஓய்வுநிலை களஞ்சிய பொறுப்பாளர் அரசமுதியோர் இல்லம் கைதடி), மனோகராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அபிராமி, அகிலேஷ் ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும், கிருஸ்ணிகா, அபிலக்ஸன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் இல.29.குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :<br>
மனைவி:<br>
இரத்தினேஸ்வரி யோகேஸ்வரன்

29, குளப்பிட்டி ஒழுங்கை,<br>
கொக்குவில் கிழக்கு.

(cs 45122) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயிலோடு...

யாழ்ப்பாணம், அரியாலைப் பகுதியில் நேற்று இரவு நடந்த விபத்தில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். இந்த விபத்து இரவு 7.30 மணியளவில் நடந்துள்ளது. யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலும், கார் ஒன்றுமே விபத்துக்குள்ளாகியுள்ளன.

ரயில் கடவையைக் கடப்பதற்கு கார் முயன்றபோதே, ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் உயிரிழந்த இருவரும் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது. சதுரங்க ரத்நாயக்க (வயது-34), மொஹமட் பாயிஸ் (வயது-31) ஆகிய இருவரே உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. விபத்துத் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தார். (அ-எ-26)

## பணிப்புறக்கணிப்புக்கு...

ரஞ்சித் இந்து வர மற்றும் சங்கத்தின் ஏனைய உறுப்பினர்கள் எதிர்வரும் 14 நாள்களுக்கு பணிப்புறக்கணிப்பில் ஈடுபட நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மின்சாரச் சட்டத்தில் கொண்டுவரப்படவுள்ள புதிய திருத்தங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கை மின்சாரசபை பொறியியலாளர்கள் சங்கம் உள்ளிட்ட சில தொழிற்சங்கங்களால் நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஆரம்பிக்கப்படவிருந்த பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதியுடன் நடத்தப்பட்ட பேச்சை அடுத்தே போராட்டம் ஒத்திவைக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது.

இந்தநிலையில், பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளைக் கருத்திற்கொண்டும், மின் விநியோகத்தை தொடர்ந்து வழங்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்திற் கொண்டும் நீதிமன்றம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு நேற்றுத் தடை விதித்துள்ளது. (எ-இ)

## 1,800 அரிசிப்...

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட தொகையை விட ஆயிரத்து 800 அரிசிப் பொதிகள் மேலதிகமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதன் ஊடாக மேலும் 9 ஆயிரம் குடும்பங்களுக்கு அவை பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

தமிழக அரசின் நிவாரணப் பொதியின் இரண்டாம் கட்டத்தில் 45 ஆயிரம் குடும்பங்களுக்குரிய அரிசி நேற்றைய தினம் அனுப்பி வைக்கப்படும் என்று உணவு ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மேலதிகமாக 50 கிலோ அரிசியைக் கொண்ட ஆயிரத்து 800 பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மேலதிகமாக 9 ஆயிரம் குடும்பங்களுக்கு அவை பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. (அ-ஒ-5)

## அரிசிக்கு...

அரிசி விடயத்தில் ஆரம்பத்தில் நிலைமை மோசமாக இருந்தபோதும் தற்போது நல்லதொரு நிலை உருவாகி வருகின்றது என்று அமைச்சர் தெரிவித்தார். அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால், அது ஆண்டின் கடைசி சில நாள்களுக்கு மட்டுமே இருக்கும் என்றும், அந்த தட்டுப்பாட்டுக்கும் தேவையான அரிசியை கொள்முதல் செய்ய வர்த்தக அமைச்சர் உத்தரவிட்டுள்ளார் என்றும் அமைச்சர் கூறினார்.

அதேவேளை, உலக உணவுத் திட்டம், ஐ.நா. விவசாய நிறுவனம் போன்ற அமைப்புக்களும் இலங்கையில் எதிர்வரும் மாதங்களில் பெரும் நெருக்கடி நிலைமை தோன்றும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நாட்டில் உணவு நெருக்கடி ஏற்படும் என்று எச்சரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ-இ)

## பொலிஸ்...

வீதித்தடைகளை தகர்த்தெறிந்து, பொலிஸ் தலைமையகத்துக்குள் செல்வதற்கு போராட்டக்காரர்கள் முற்பட்டதால், பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும், அவர் தலைமையிலான அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி காலிமுகத்திடலிலும் (கோத்தா கோ கம), அலரிமாளிகைக்கு முன்பாகவும் (மைனா கோ கம) தன்னெழுச்சி போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்தது. கடந்த மாதம் 9 ஆம் திகதி போராட்டக்காரர்கள் மீது திட்டமிட்ட அடிப்படையில் தாக்குதல் நடத்தப்பட்டது. கூடாரங்கள் அடித்து நொருக்கப்பட்டு கொளுத்தப்பட்டன. போராட்டக்காரர்கள் காயமடைந்தனர்.

மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவித்து அலரிமாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்துக்கு வந்திருந்த அரசியல் பிரமுகர்களும், அவர்களின் சகாக்களுமே அறவழிப் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர். அதையடுத்து நாடு முழுவதும் வன்முறை வெடித்தது. சுமார் 37 அரசியல்வாதிகளின் வீடுகள் கொளுத்தப்பட்டன. ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட 9 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் நடந்து நேற்றுடன் ஒரு மாதம் நிறைவு பெறுகின்றது. இந்த நிலையிலேயே நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என வலியுறுத்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு கோட்டைக்கு முன்பாக திரண்ட தன்னெழுச்சிப் போராட்டக்காரர்களும், சமூகச் செயற்பாட்டாளர்களும், மக்களும் அங்கிருந்து பேரணியாக பொலிஸ் தலைமையகம் நோக்கிச் சென்றனர். அதையடுத்து பொலிஸ் தலைமையக வளாகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இவற்றை மீறி, பொலிஸ் தலைமையகத்துக்குள் செல்வதற்குபோராட்டக்காரர்கள்முற்பட்டவேளை, பொலிஸார் கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டனர். பின்னர் போராட்டக்காரர்கள், காலி முகத்திடல் நோக்கிச் சென்றனர். (அ-எ-44)

## லாப்ஸ்...

அவை நேற்று விநியோகிக்கப்படவில்லை. எரிவாயு சிலிண்டருக்காகக் காத்திருந்த மக்கள் அதனால் ஏமாற்றமடைந்தனர்.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டபோது எரிவாயு சிலிண்டர்கள் நேற்றும் பகல் வரை வந்து சேரவில்லை என்று அறிய முடிகின்றது.

அதையடுத்து இன்று காலை லாப்ஸ் எரிவாயு சிலிண்டர்களை மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் எரிவாயு சிலிண்டர்களை கணக்கெடுத்த பின்னரே அவற்றை விநியோகிக்க வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது . (அ-எ-இ)

## தீயில்...

யாழ்ப்பாணம், அரியாலையைச் சேர்ந்த சுதாகரன் துளசிகா (வயது-28) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

கடந்த 6ஆம் திகதி தீக்காயங்களுக்குள்ளான நிலையில், இவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு அவர் உயிரிழந்துள்ளார்.

தனது காதலனுடன் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்தே இவர் தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்டார் என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## சரணடைந்த...

காலிமுகத்திடல் தாக்குதல் சந்தேகநபரான முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ எம்.பி. நேற்று மாலை கோட்டை நீதிவான் திலின கமகேவின் இல்லத்துக்குச் சென்று சரணடைந்தார். அவரை தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல அனுமதித்த நீதிவான், வெளிநாட்டுப் பயணத் தடையையும் விதித்தார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அறிவிக்கும் திகதியில் வாக்குமூலம் அளிக்க வர வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை நேற்றிரவு 8 மணிக்கு முன்னதாக நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுப் பகல் உத்தரவிட்டிருந்தது. அவரைக் கைதுசெய்வதற்காக கோட்டை நீதிவான் பிறப்பித்த பிடியாணையை அவர் சரணடையும் வரை நடைமுறைப்படுத்த வேண்டாம் என மேன்முறையீட்டு நீதிமன்றம், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று உத்தரவு பிறப்பித் திருந்தது.

அதேவேளை- ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தாக்கல் செய்துள்ள எழுத்தாணை மனு தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இறுதித் தீர்ப்பை வழங்கும் வரை நீதிமன்றத்தில் முன்னிலையாகும் அவருக்கு எவ்வித உத்தரவையும் பிறப்பிக்க வேண்டாம் எனக் கோட்டை நீதிவானுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. (அ-எ-22)

## மின்சாரத்...

மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது. சட்ட வரைவுக்கு ஆதரவாக 120 வாக்குகளும் எதிராக 36 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. வாக்களிப்பில் 13 பேர் கலந்து கொள்ளவில்லை.

இந்த சட்ட வரைவு வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவால் நேற்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. சட்ட வரைவு மீதான விவாதம் நேற்று நாள் முழுவதும் இடம்பெற்ற நிலையில் இறுதியில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல திருத்த சட்ட வரைவை நிறைவேற்ற வாக்கெடுப்பை கோரினார்.

அதையடுத்து நடந்த இலத்திரனியல் வாக்கெடுப்பில் மின்சார திருத்த சட்ட வரைவுக்கு ஆதரவாக அரசுடன் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி , இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் வாக்களித்த நிலையில்,அதற்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி,ஜே .வி.பி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் வாக்களித்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி , தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவை வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

அதேவேளை மின்சாரத்திருத்தச் சட்ட வரைவில் சில திருத்தங்களை எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா முன்வைத்தபோதும் அவற்றை அரசாங்கம் நிராகரித்தது. (அ-எ-இ)

## முடிந்ததைச்...

தடை இல்லை. என்னால் முடிந்தளவு, மக்களுக்கு சேவையாற்றினேன். மக்கள் ஆணை வழங்கினால் மீண்டும் வருவேன்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக் கொண்டுள்ளேன். இது தொடர்பாக உரிய வகையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் என்பதும் அரச நிர்வாகம் என்பதும் வேறு. அந்தவகையில் அரச நிர்வாகத்தில் இருந்து முழுமையாக விலகுகின்றேன். எனினும், அரசியல் பயணம் தொடரும். கட்சிக்காக என்னை அர்ப்பணிப்பேன்.

நெருக்கடியான சூழ்நிலையில், நிதி அமைச்சுப் பதவியை ஏற்கவே நான் நாடாளுமன்றம் வந்தேன். எனவே, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறப்பது கவலை அல்ல. என்னால் முடிந்தளவு, மக்களுக்கு சேவையாற்றினேன். ஆனால் மக்கள் எதிர்பார்த்த அனைத்தையும் நிறைவேற்ற முடியாமற்போனது.

நபர்கள் மாற்றத்தை அல்ல, “சிஸ்டம்” மாற்றத்தையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால் நபர்கள் மாற்றத்தையே நாம் செய்கின்றோம். எதிர்காலத்திலாவது “சிஸ்டம்” மாற்றம் செய்யப்பட வேண்டும். எனக்கு எதிராக பல வழக்குகள் தொடுக்கப்பட்டன. சிறையில் அடைக்கப்பட்டேன். வழக்குகளுக்கு முகங்கொடுப்பது பிரதான நோக்கமாக இருந்தது. கடைசி வழக்கில் இருந்தும் விடுதலை பெற்றுள்ளேன்.

அடுத்ததாக என்னால்தான் மஹிந்த ராஜபக்ச தோற்றார் என்றார்கள். அதனால் மஹிந்தவை மீண்டும் பதவிக்கு கொண்டுவர நினைத்தேன். இவ்விரண்டும்தான் எனது எதிர்பார்ப்புகளாக இருந்தன. இவை நிறைவேறின. மாறாக நான் பதவிகளை இலக்கு வைக்கவில்லை - என்றார். (அ-எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## '21'க்கு...

தேர்தல் முறைமையில் மாற்றமும் அவசியம். மாகாணங்களை கட்டுப்படுத்தும் ஏற்பாடு நாடாளுமன்றத்துக்கு இருக்க வேண்டும். 21ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் முடிவுக்கு என்னால் உடன்பட முடியாது. அதனால்தான் முன்கூட்டியே பதவி விலகினேன்- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டுமென அந்த முறையை உருவாக்கப்பட்ட தருணம் முதல், வலியுறுத்தி வருகின்றோம். ஜனாதிபதித் தேர்தல்களின்போது உறுதிமொழிகளையும் வழங்கியுள்ளோம். கடந்தமுறை மட்டும்தான் அந்த உறுதிமொழி வழங்கப்படவில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்பது குறித்து சாதகமான நிலைப்பாட்டிலேயே எமது கட்சி இருக்கின்றது. அது நடக்க வேண்டுமானால் தேர்தல் முறைமை மாற்றப்பட வேண்டும். தற்போதைய முறைமையின்கீழ் நிலையான நாடாளுமன்றம் அமையாது. அடுத்ததாக மாகாணங்களை கட்டுப்படுத்தும். அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் ஒற்றையாட்சிக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும். இந்தியாவில் மாநிலங்களை கட்டுப்படுத்தும் ஏற்பாடு நாடாளுமன்றத்துக்கு உள்ளது. அதேவேளை, அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு நான் எதிர்ப்பு. இது எனது தனிப்பட்ட கருத்து.

நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்கள் வழங்கப்படுவதை நான் எதிர்க்கவில்லை. சுயாதீன ஆணைக் குழுக்கள் போன்ற விடயங்கள் வரவேற்கத்தக்கது. ஆனால் தற்பேர்தைய் பிரதமருக்கு மக்கள் ஆணை இல்லை. அவர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவர் என்பதைக் கவனத்தில்கொள்ள வேண்டும். 21க்கு உரித்துடையவர் யார் என்ற சர்ச்சை உள்ளது. இது தொடர்பில் தெளிவு பெறவே பிரதமரைச் சந்தித்தோம். 21 ஆவது திருத்தச்சட்ட வரைவு தொடர்பில் எமது கட்சி உறுப்பினர்கள் மன சாட்சியின் பிரகாரம் வாக்களிப்பார்கள். 21 தொடர்பில் அரசு எடுக்கும் முடிவுக்கு என்னால் உடன்பட முடியாது. அதனால்தான் முன்கூட்டியே பதவி விலகினேன் - என்றார். (அ-எ-44)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில்
4 பரப்பு காணி விற்பனைக்குண்டு

நிலப்பரப்பு

- A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட்)
- A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

பார்வையிடும் நேரம் :
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு : ஜெயம்

077 814 7389, 077 241 7589

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

ஆங்கிலம் ஓரளவு பேசத் தெரிந்த (30-40) வயதுடைய இலங்கை, இந்திய உணவுகள் நன்கு சமைக்கத் தெரிந்த ஆண்கள் தேவை.

நாடு : இங்கிலாந்து

076 560 1691

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்திக்கு அருகாமையில் A9 வீதி முகப்புடன் 12 பரப்புக்காணி விற்பனைக்கு.

நிலப்பரப்பு.

- 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் A9 வீதி முகப்புடன் வாகனங்கள் தரித்து நிற்பதற்குரிய பாரிய இடவசதி வீதியுடன் அமைந்துள்ளது.
- வியாபார நிலையங்கள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த நல்ல தண்ணீர் மேட்டுக் காணி.
- நாவற்குழி சந்தியிலிருந்து கைதடி செல்லும் வீதி முகப்புடன் லங்கா அசோக் லேடன் வாகன காட்சியறை நேரெதிரே அமைந்துள்ளது.
- பார்வையிடும் நேரம் : காலை 8.00 - மாலை 6.00 மணிவரை.

077 62 34 204
077 28 80 152

## TECHNO WORLD
## தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்

### A/L 2024 தொழில்நுட்ப பிரிவு

- பொறியியல் தொழில்நுட்பவியல்.
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்.
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்.
- I.C.T, விவசாயம், புவியியல், ஊடகக் கல்வி, கணிதம் (7), சித்திரம்.

திகதி : 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 a.m.

(CR 36090)(3-6)

Call Now: 077 017 5346

## விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி

இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

யாழ் நகரின் அனுபவமும் தேர்ச்சியும் மிக்க முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலில் புதிய கல்வியாண்டு

ஆரம்பம்

A/L 2024 | 12 ஆனி | AM- 09.01

தொழில்நுட்பப் பிரிவு
வழமையான அதே ஆசிரியர் குழாம்

வர்த்தகப் பிரிவு
கணக்கீடு - R.வின்சன்
வணிகக்கல்வி - ச.பிரதீபன்
பொருளியல் - பிரபல ஆசிரியர்

கலைப் பிரிவு
கணிதம் - இ.சுஜிதரன்
ஊடகம் - S.கோணேஸ்
வரலாறு - பிரபல ஆசிரியர்

தமிழ் - திரு.பத்மநாதன்
ICT - S.மயூரதாசன்
புவியியல் - வி.செந்தூரன்
அரசியல் - கே.சபேசன்

இன்றே இணைந்து புதிய அனுபவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

077 248 7774 / 076 552 9093

## ஆர். ஜி ரேடர்ஸின் விசேட விலைக்கழிவு

ஆர்.ஜி ரேடர்ஸ் மற்றும் ரட்ணம் பிறதேர்ஸின் 20ஆம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு இம்மாத இறுதிவரை வழங்கும் விசேட விலைக்கழிவினைப் பெற்றிடுங்கள்

I. CHAIN WHEEL SET - (ALL 150 CC HERO MODELS) - 8800 /= 6975 /=
II. CHAIN WHEEL SET - (ALL 100CC HERO MODELS) - 7885 /= 5450/=
III. TIMING CHAIN KIT (GLAMOUR,SUPER SPLENDER) - 7235/= 4430/=
IV. ACCERALETER CABLE (HUNK, ACHIUER,X-TRRME) - 1050 /= 805/=
V. BREAK SHOE (ALL HERO MODELS) - 2910 /= 2400 /=
VI. SPARK PLUG (ALL HERO MODELS) - 920 /= 700/=
VII. SHAKO HELMET - 5300 /= 3500 /=
VIII. TYRE (ALL SCOOTER MODELS (CEAT,PUMA,MRF, TVS - 8000 /= 6500 /=
IX. OIL - CALTEX - 2235 /= 1750 /=
X. MOTUL OIL (MOTOR BIKE) - 2850 /= 1990 /=

இத்துடன் அனைத்து மோட்டார் வாகனங்களுக்குரிய பற்றிகளுக்கும் 20 % விலைக்கழிவு வழங்கப்படும்.
HONDA GENERATOR, MICROTEK, LUMINOUS 1000 W இருந்து 2500 W வரை INVERTER களைப் பெற்றுக்கொள்ளலாம்.



மேலதிக விபரங்களுக்கு:
021 222 7667 / 021 222 6185, 077 734 0056 / 077 674 7051/ 071 971 0981
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

(cs 45121)(2-6)

R.G.Traders
291, STANLY ROAD JAFFNA.


## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவு

மண்ணில் 1951 . 07 . 16
விண்ணில் 2022 . 05 . 11



அமரர்
**மரியாம்பிள்ளை தேவரட்ணம்**
(தேவகிளி)
(Regina Transport, Regina Hardware, Regina Building - உரிமையாளர்)

"தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்
ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்" (மத்.5:8).

அப்பா!
நீங்கள் இறைவன் எமக்கு தந்த ஒரு கொடை.
உங்கள்
ஆழமான விசுவாசம், கடின உழைப்பு
யாரையும் புண்படுத்தாத நல்ல மனம்
உதவி செய்யும் தாராள குணம்
வளமையிலும் எளிமையான வாழ்வு
எல்லோரையும் மதிக்கும் உயர்பண்பு
மன்னித்து மறக்கும் மனம்
கனிவான பேச்சு
தூய்மையான உள்ளம்.
இவைகள் உங்கள் வாழ்வின்
உயரிய மனிதப் பண்புகள்.
இவ் உயரிய பண்புகளில் நாமும் வழிநடக்க
விண்ணகத் தந்தையிடம்
விண்ணிலிருந்து வேண்டுங்கள்.

எமது துயரில் உடனிருந்து, எமது அப்பாவின் இறுதிப்பயணச் சடங்கிலும் கலந்து, அவருக்கு மரியாதை செலுத்தி, அவருக்காகச் செபித்த உங்கள் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றிகள்.

எமது அப்பாவின் ஆன்மா இறைவனில் இளைப்பாற 10.06.2022 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு பொற்பதி புனித இராயப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற்திருப்பலியில் பங்குகொண்டு செபிக்கவும், அதனைத்தொடர்ந்து எமது பொற்பதி இல்லத்தில் நடைபெறும் மதிய விருந்திலும் கலந்து கொள்ளவும் தங்களை அழைத்து நிற்கின்றோம்.

பொற்பதி, குடத்தனை, பருத்தித்துறை.

- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.